விலை 20/=


பக்கங்கள் 24

29 ஜுன் 2019

புதுமை : 04 விதி : 160

# புதுவிதி
PUTHU VITHI

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




## இரத்தவெறி கொண்ட மத மேலாதிக்கம்



கட்டடக்கலையில் நுழைவாசல்கள்



நிலை தடுமாறும் சர்வதேசம்!




காவிகளின் அரசியலுக்குப் பலியான தமிழ் - முஸ்லிம் இன உறவு



சிங்கம் எப்போதுமே சிங்கம்தான்...!

# இரத்தவெறி கொண்ட மத மேலாதிக்கம்




அண்மையில் விகாரை ஒன்றில் இடம்பெற்ற மத நிகழ்வு ஒன்றில் மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாம் அனைவரும் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைப்படி நடக்க வேண்டுமெனவும், இப்படி நடந்தால் நாட்டில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதெனவும் நாடு அமைதியுடனும், சமாதானத்துடன் துரிதமாக அபிவிருத்தியடையும்எனவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளையில் யட்டிசவரவிலுள்ள ரஜமகாவிகாரையில் அஸ்கிரிய பீடத்தின் விகாரதிபதி வரகொட ஞானரத்ன தேரர் மக்கள் முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும் முஸ்லிம்களின் உணவகங்களில் உணவு உட்கொள்ளக் கூடாதெனவும் முஸ்லிம்கள் சிங்களவரைஅழிக்கும் வகையிலேயே செயற்படுகின்றனர் எனவும் அது கடும் கண்டனத்துக்குரியது எனவும் தெரிவித்திருந்தார். மேலும் குருநாகலில் முஸ்லிம் மருத்துவர் மேற்கொண்ட சத்திரசிகிச்சைகள் மூலம் ஒரு லட்சம் சிங்களக் குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பு இல்லாமலாக்கப்பட்ட தெனவும் இப்படியானவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட்ட வேண்டுமெனப் பலர் கூறுகின்றனரெனவும் தான் அப்படிச் செய்யும்படி சொல்லப் போவதில்லையெனவும் ஆனால் அது சரியானதெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அன்பு, கருணை, கொல்லாமை என்பனவற்றைப் போதிக்கும் கௌதம புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறும் ஓர் உயர் பௌத்த மத பீடத்தின் விகாரதிபதி ஒருவர் கல்லெறிந்து கொல்லப்படுவது சரியானதெனப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். இலங்கையைப் பொறுத்த வரையில் இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. 1915 அநகாரிக தர்மபாலவின் வழிகாட்டலில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பேரழிவு நடவடிக்கைகள் தொட்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புக் கலவரங்கள் உட்பட அண்மையில் வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் வரை சிறுபான்மை மக்களுக்கு எதிரான அழிப்பு நடவடிக்கைகளில் பௌத்ததேரர்கள் வகித்த பங்கை எவரும் மறந்துவிட முடியாது. முஸ்லிம் இனத்துக்கு எதிரான குரோத மனப்பான்மையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்குவதில் அவரின் உரை முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் எனப் பல்வேறு அரசியல்வாதிகளும் மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களை அடிக்கடி சந்தித்து ஆசிகளையும் ஆலோசனைகளையும் பெறத் தவறுவதில்லை. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களைத் தீர்மானிப்பதில் இவர்களின் பங்கு தீர்க்கமானது.

இப்படியான ஒரு நிலையில்தான் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைப்படி எல்லோரும் நடக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். அப்படியானால், ஜனாதிபதி அஸ்கிரிய பீடாதிபதியின் ஆலோசனைப்படி முஸ்லிம்கள் புறமொதுக்கப்பட வேண்டும் எனவும் மருத்துவர் சகாப்தீன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறாரா? அதற்காகவா 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது முஸ்லிம் மக்கள் அவருக்குப் பேராதரவை வழங்கி அவரை அதிகார பீடத்தில் ஏற்றி வைத்தனர். அன்பும் கருணையும் கோட்பாடாகக் கொண்ட ஒரு மதத்தை தேசிய மதமாக்க வேண்டும் என கூக்குரலிடும் இவர்கள் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதையே கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

**இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி முஸ்லிம் மக்களுக்கு எதிராக நஞ்சை கக்க ஏற்கனவே** களத்தில் சண்டிய நாயகர்களாக அத்துரலிய ரத்ன தேரர் ஞானசார தேரர் ஆகியோர் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டும் வகையில் இறங்கியுள்ளனர்.

கல்முனை உப செயலாளராக காணி, நிதி அதிகாரம் கொண்ட பிரதேசச் செயலகராக தரமுயர்த்துமாறு இப்பகுதித் தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே போராட்டம் நடத்தி வருகின்றனவா? சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் அது இன்றுவரை பிற்போடப்பட்டு வந்தது. எனவே தற்சமயம் மத குருக்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் மேற்படி கோரிக்கையை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கல்முனை உப செயலகம் தரமுயர்த்தப்படுவதால் முஸ்லிம்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லாதிருந்த போதும் அதற்கெதிராக சில முஸ்லிம்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் பின்னால் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் உட்படச் சிலர் தலைமையளிப்பதாகக் கூறப்படுகின்றது. இதில் இவர்கள் செய்யும் முட்டாள்தனம் அரசாங்கத்துக்கு எதிராக அதாவது அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்து நடத்தப்படும் தமிழ் மக்களின் போராட்டத்தை முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டமாகக் காட்ட முற்படுவதுதான். இதில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் முரண்பாடுகளை வளர்க்கும் ஒரு நயவஞ்சக நோக்கம் இழையோடுவதை அவதானிக்க முடிகிறது. ஆனால், இனப்பிரச்சினையை பௌத்த பேரினவாத சக்திகள் பயன்படுத்த குறிப்பிட்ட முஸ்லிம் தலைமைகள் களமமைத்துக் கொடுத்துள்ளன.

அத்துரலிய ரத்ன தேரர், மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் பீடாதிபதி சுமங்கல தேரர் ஆகியோர் தமிழ் மக்கள் போராட்டம் நடத்திய இடத்துக்குச் சென்று அங்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் அங்கு சென்று உண்ணாவிரதிகளுக்கு நீராகாரம் வழங்கியதுடன் பிரச்சினையை ஒரு வாரத்துக்குள் தீர்த்துத் தருவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.

எப்படியிருந்த போதிலும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் வலுப்படுத்த முஸ்லிம்களை தனிமைப்படுத்தும் தமது உள்நோக்கத்தை இதன் மூலம் முன்னெடுக்கின்றனர் என்பதை எதிர் போராட்டம் நடத்தும் முஸ்லிம்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோர் தமிழ் மக்களுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டு சிங்களப் பேரினவாதிகளை குறிப்பாக ராஜபக்ஷ சகோதரர்களை திருப்திப்படுத்தும் வகையில் செயற்பட்டு வந்தனர் என்பது மறைக்கப்பட முடியாத உண்மையாகும். கல்முனையில் இடம்பெறும் முஸ்லிம்களின் சத்தியாக்கிரகப் பேராட்டத்தின் பின்னணியில் அதாவுல்லாவே செயற்படுவதாகவும் தெரிய வருகிறது. மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசிகளான அஸ்வர், பைசல் காசிம், ஹலீம் போன்றோரும் இதில் கலந்து கொண்டு போராட்டத்தை நடத்தி வருகின்றனர். காலம்காலமாக சிங்கள – பௌத்த பேரினவாதிகளுக்கு துதி பாடி தங்கள் சொந்த நலன்களைப் பேணி வந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளே இப்போராட்டத்தை முன்னின்று நடத்தி வருகின்றனர்.

**அதேவேளை தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில்** அப்பகுதி மக்களாலும் மதத் தலைமைகளாலும் நடத்தப்படுவதாகும். அதற்கு இன, மத வெறி கொண்ட அத்துரலிய தேரர், ஞானசார தேரர் போன்றோர் ஓடிவந்து ஆதரவாளர் வேடம் போடுகின்றனர். தாங்களே பிரச்சினையைத் தீர்ப்பதாகவும் வாக்களித்துள்ளனர். அதாவது நாட்டின் அரசாங்கத்தை விட தாங்கள் சக்தி மிக்கவர்கள் எனவும் தமிழ் மக்களுக்கு ஆதரவானவர்கள் எனவும் முகம் காட்டுகின்றனர்.

தமிழ் மக்களின் பாரம்பரிய வழிபாட்டிடமான கன்னியாய் வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் பௌத்த மயமாக்க எடுக்கப்படும் முயற்சியைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காத, நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயம், வெடுக்குநாறி லிங்கேஸ்வரர் ஆலயம் என்பன அபகரிக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்காத இவர்கள் கல்முனை வடக்கு தமிழ் மக்களுக்காக கண்ணீர் விடுவதை நம்ப முடியுமா? மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமங்கல தேரர் மட்டக்களப்பு நகரின் நுழைவாயிலில் ஒரு பிரமாண்டமான புத்தர் சிலையை நிறுவ முயன்று தமிழ் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டதும் மறந்துவிட முடியாது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக அநீதிகள் மேற்கொள்ளப்படும்போது தொடர்ந்து மௌனம் காத்தவர்கள் அல்லது பங்கு கொண்டவர்கள் இன்று கல்முனை பிரதேச செயலகப் பிரச்சினையில் தமிழர்களுக்காக சீறி எழுகிறார்கள் என்றால் அது தமிழ் மக்களின் நலன்களில் உள்ள அக்கறை காரணமானது எனக் சொல்லி விட முடியுமா?

ஒருபுறம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு எதிராக சிங்கள பேரினவாத சக்திகளின் கையாட்களான முஸ்லிம் தலைமைகள் சில முஸ்லிம் மக்களைக் களமிறக்கி மறுபுறம் பேரினவாத தேரர்கள் தமிழ் மக்களுக்காகப் பாடுபடுவதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றனர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் நிரந்தரமான பிளவை ஏற்படுத்தி சிறுபான்மை மக்களின் இணைவைத் தடுக்கும் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும்.

இங்கு, மனோ கணேசன் குறிப்பிட்ட ஒரு முக்கிய விடயம், 'முஸ்லிம் தலைமைகளின் பிடிவாதமும் தமிழ் தலைமைகளின் இயலாமையும் கல்முனைப் பிரச்சினையை வேறு ஒரு தளத்துக்கு இட்டுக் செல்கிறது", என்பதுதான் அது.


அதாவது இன்று தேரர்களே தமது பௌத்த – சிங்களப் மேலாதிக்க நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நாட்டை வழிநடத்துமளவுக்கு மேலோங்கி வருகின்றனர். இன்று முஸ்லிம்களை கல்லெறிந்து கொல்வது சரி எனக் கூறும் இவர்கள் நாளை தமிழர்களையும் கல்லெறிந்து கொல்ல வேண்டும் எனக் கூறினால் ஆச்சரியப்பட இடமில்லை. ஏனெனில 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புக் கலவரங்களின்போது தமிழ் மக்களின் இரத்தத்தில் தோய்ந்த தேரர்களின் கரங்களை நாம் மறந்துவிட முடியாது. இரத்தவெறி கொண்ட மதமே மத மேலாதிக்கத்தின் வெளிப்பாடே கல்லெறிந்து கொல்வது சரியானது எனக்கூறப்பட்ட தேரரின் கருத்தாகும். ●

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 04 | 29 ஜுன் 2019 | விதி : 160

# ஜப்பானுக்கு மனிதவள ஏற்றுமதி




இலங்கை சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரத்திலிருந்து முற்றாகவே விலகி ஏற்றுமதி - இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட தங்கு நிலைப் பொருளாதாரத்துக்கு மாறி விட்டது. அவ்வகையில் தேயிலை, தைக்கப்பட்ட ஆடைகள், மீன் என்பவற்றுடனுடன் மனிதர்களும் ஏற்றுமதிப் பண்டங்களாகி விட்டனர்.

தற்சமயம் மத்திய கிழக்கில் 7 இலட்சம் பேரும் தென்கொரியாவில் 4 இலட்சம் பேரும் கட்டட வேலை, சாரதி, வீட்டுப்பணி, சுத்திகரிப்புப் பணி போன்ற உடலுழைப்பு பணிகளில் ஈடுபட்டு அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றனர். தற்சமயம் ஜப்பானுக்குப் பெருமளவு தொழிலாளர்களை உடலுழைப்புத் தொழில்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானுக்குத் தொழிலாளர்களை அனுப்பும் 9 நாடுகளில் இலங்கை ஏழாவது இடத்தை வகிக்கிறது.

இலங்கை நல்ல நீர் வளம், நில வளம் கொண்ட நாடாக இருந்த போதிலும் கூட வெளிநாடுகளுக்கு மனிதர்கள் ஏற்றுமதி செய்வது தொடர்பாக ஒரு சிங்கள தேசபக்தர் கருத்து வெளியிடுகையில், பிரித்தானியா காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தென்னாபிரிக்கா, மலேசியா, பிஜி, மொரிஷியஸ், இலங்கை போன்ற நாடுகளுக்கு தமிழர்கள் கூலிகளாக ஏற்றப்பட்டதால் இப்போது அந்த நாடுகளிலெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றனர் எனவும் சிங்களவர் இலங்கையில் மட்டும் வாழும் இனமாக இல்லாமல் தமிழரைப்போல உலகம் முழுவதும் பரந்து வாழ வேண்டும் என்பதற்காகவே சிங்களவர் அனுப்பப்படுகின்றனர் எனக் கருத்து வெளியிட்டார்.

ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாக ஏற்றப்பட்ட கறுப்பினத்தவரின் வாரிசான ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாக வந்தார் என்பதையும் அவர் சுட்டிக்காடத் தவறவில்லை.

**கான மயிலாடக் கண்ட வான்கோழி தானும் சிறகு விரித்து ஆடியதாம்**




# காடழிப்பைத் நிறுத்த இயந்திர வாளுக்கு தடை

இலங்கையில் பெருமளவில் காடுகள் அழிக்கப்படுவதால் சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மரம் தறிக்கும் இயந்திர வாள்களைத் தடை செய்வதாக அறிவித்துள்ளார். எனவே விரைவில் இயந்திர வாள்களை தடை செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது. ஏற்கனவே இயந்திர வாள்கள் இறக்குமதியை தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டப்பட்டு விட்டது.

கோடரிகள் மூலம் மரங்கள் தறிக்கப்படுவதும், தொல்பொருட் திணைக்களத்தின் அனுசரணையுடன் காடுகள் நடுவில் விகாரைகள் அமைக்கப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவது போன்ற நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாதா என்பது பற்றி ஜனாதிபதி எதுவும் கூறவில்லை.

அதேவேளையில் சுற்றுச்சூழல் பாதிப்பால் புவி வெப்பமடைவது இமயமலையிலுள்ள பனிப்பாளங்களில் மூன்றில் ஒரு பகுதி உருகிவிட்டதாகவும் அதனால் இலங்கை, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் கடும் நீர்ப்பஞ்சத்தை எதிர்கொள்ள வேண்டி விடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் சார்க் மகா நாட்டில் எமது ஜனாதிபதி நீர்ப்பஞ்சத்தை எதிர்கொள்ள இனி நீரை வாளி, குடம் போன்றவற்றில் எடுக்கக்கூடாது என்றும் செம்பில்தான் எடுக்க வேண்டுமெனவும் பிரேரனை கொண்டு வருவாரோ என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

**தலையிடியைக் சுகப்படுந்த தலையணையை மாற்றுவோம்**

# அமெரிக்காவின் ஆலோசனை சீனாவின் பாதுகாப்பு

இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பிரதம ஆலோசகராக முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலர் பிரசாந் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். வெளியுறவுச் செயலராக மட்டுமன்றி நீண்ட காலம் ராஜதந்திர சேவையிலும் ஈடுபட்ட பிரசாந் காரியவாசம் இப்படியொரு உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டதை எவரும் தவறென்று சொல்லி விட முடியாது. ஆனால் இவருக்கான ஊதியம் அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் வழங்கப்படுவதுதான் பல விதமான கேள்விகளை எழுப்பியுள்ளது.





இவர் தனக்கு சம்பளம் வழங்கும் தரப்பின் நலன்களுக்கு சாதகமாகச் செயற்படுபவரா என்பது பலரிடம் எழும் சந்தேகமாகும். நாடாளுமன்ற நடைமுறைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் ஒருவர் பிறநாடு ஒன்றின் முகவராகச் செயற்படும் பிரதிநிதிகளின் சிறப்புரிமை பாதுகாக்கப்படுமா என்ற ஐயமும் எழுப்பப்படுகிறது.

இன்னொரு புறம் நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு என சீனா இலங்கைக்கு 33 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதில் மூன்று எக்ஸ்-ரே யந்திரங்கள் உட்பட நவீன உபகரணங்கள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சீன ஆலோசகர்கள் வந்துள்ளனரா என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இலங்கையில் அபிவிருத்தி, முதலீடு, அரசியல் எனப் பல்வேறு விடயங்களிலும் ஆதிக்கம் வகிக்கும் அமெரிக்க - சீனப் போட்டி தற்சமயம் நாடாளுமன்றத்திற்குள் புகுந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

**அற நனைந்தவனுக்கு கூதலென்ன? குளிரென்ன?**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்







**மனைவிக்கு எல்லாம் தெரியும்!**

வெளியே போய் இரவு வீடு திரும்பினர் கணவனும் மனைவியும்..


கேட்டில் போட்டிருந்த பூட்டு மக்கர்.

"இந்தாங்க ,நீங்க டார்ச் அடிங்க நான் திறக்கறேன்"னுட்டு மனைவி ரொம்ப நேரமா சாவியப் போட்டு சுத்தி சுத்திப் பார்த்து சலிப்படைஞ்சு போய் "நான் டார்ச் பிடிக்கிறேன் நீங்க தெறங்க"ன்னா.

அந்தக்கணவர் சாவியப் போட்டதுமே "க்ளிக்" பூட்டு திறந்து விட்டது.


அதப்பார்த்துட்டு அந்த மனைவி கணவனைப் பார்த்து கோபமாகச் சொன்னா "இப்பத் தெரிஞ்சுதா டார்ச் எப்புடி புடிக்கணும்னு" ன்னு. !

TAMILVOICE.COM

























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## மீண்டும் சாவைத் தொடும் ஜனநாயகம்

தமிழரையும் முஸ்லிம்களையும் மோத விடுவதன் மூலம் அதிக இலாபங்களை அறுவடை செய்ய முடியும் என சிங்கள – பௌத்த பேரிவாதம் திட்டமிட்டு செயற்படுகின்றது. இதற்கான தூபமிடலே கல்முனை பிரதேச செயலக விவகாரம். இந்த விடயத்தில், இரு தரப்பினரும் அதிகம் முட்டி மோதுவது சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கைக்கூலிகளே.

கிழக்கு மாகாணம் எங்களுக்கு மட்டுமே என்று முஸ்லிம்கள் தனித்துச் சொந்தம் கொண்டாட முடியாது. அதேபோன்று வடக்கு மாகாணம் எங்களுக்கே சொந்தம் என்று தமிழர்களும் உரிமை எடுக்க முடியாது. வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். இது காலாதிகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட – தமிழரின் ஆயுதப் போராட்டம் வலிமைமிக்கதாக இருந்தபோது கூட மாற்றப்படாத கொள்கையாகவே இருந்தது. ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதுபோல் அரசியல்வாதி என்ற அரிதாரம் பூசியவர்கள் எல்லோரும் தாம்தான் மக்களின் தலைவர்கள் – தாம் சொல்வதே சரி என்பதாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பான்மை இனத்தவர்களுக்குத்தான் கிழக்கு சொந்தம் என்றால், வடக்கு சொந்தம் என்றால் சிங்கள – பௌத்த பேரினவாதம் சொல்வதுபோல ஒட்டு மொத்த இலங்கையும் அவர்களுக்குத்தான் சொந்தம் என்பதும் சரியாகி விடும். ஆனால், இப்போது பிரச்சினை அதுவல்ல. அது ஜனநாயகமும் அல்ல. எப்போதும் பெரும்பான்மை இனத்தவர்களின் செயல்கள் சிறுபான்மை இனங்களைப் பாதிக்கக்கூடாது.

கல்முனை விவகாரமும் இந்த வகையானதுதான். சொற்ப இன நலன்களுக்காக இனங்களின் ஒற்றுமை என்ற மிகப்பெரிய பலத்தை இழந்துவிட தமிழர்களும் முஸ்லிம்களும் துணிந்து விட்டனர். மக்களின் எண்ணிக்கை, அரசியல் பலம் என்பவற்றை வைத்துக் கொண்டு கல்முனைக்காக இரு இனங்களும் அடிபட்டுக் கொண்டிருக்க சிங்கள – பௌத்த பேரினவாதம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடி விழுங்கி ஏப்பமிட இலகுவாகி விடும்.

வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை தமிழர்களும் முஸ்லிம்களும் நினைவில் கொண்டு செயற்படுவதே இரு இனத்தவர்களின் பாதுகாப்புக்கும் – எதிர்காலத்துக்கும் நன்மையளிப்பதாக இருக்கும். இதை உணர்ந்தே செயலாற்ற வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 57

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

'ஐயா ரைபிளை விட்டிட்டு ஓடுறீங்கள்", என மக்கள் பின்னால் ஓடியபடி கத்திய சத்தம் அந்த வீரனின் காதுகளில் கேட்கவில்லை. பயத்தில் அவன் திரும்பியே பார்க்கவில்லை. அது பகல் நேரம் மக்கள் தறப்பாள் கொட்டில்களுக்குள் பதுங்கிக் கொண்டனர். காவல் இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட முன்னாள் போராளிகள் பலர் அந்த ஆற்றோடையின் வழியில் அங்கிருந்து தப்பி ஓடினர். பகல் பொழுது பயணம் வெளியிலும் சந்தேகத்தை தந்திருக்காது. அவர்கள் கடல்வழியாக இந்தியாவை நோக்கி ஓடியிருக்கலாம் என விடயம் தெரிந்த மக்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர்.

இவ்வாறு அவர்கள் கதைப்பதற்கு காரணமும் இருந்தது. தத்தமது கூடாரங்களில் இருந்த புலிகள் தப்பிய பிறகு, அந்த பிள்ளை பிடிகார கிழவியைப் பிறகு காணவில்லை என்பதே அது. மக்கள் ஒவ்வொரு விடயங்களையும் கோத்துப் பார்த்து தங்கள் சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்து, தங்கள் கதைகளுக்கு உருவம் கொடுத்துக் கொண்டனர். ஆனால், இதை வெளியில் கதைக்க அஞ்சினர்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தற்காலிக வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்களும் வைத்தியப் படிப்பு படிப்பவர்களும் வந்து நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கினர். பெரும்பாலானவர்கள் சிங்கள வைத்தியர்களாக இருந்தார்கள். மருத்துவருக்கும் நோயாளிகளுக்கும் இடையில் மொழி என்பது பெரும் பிரச்சினையாக இருந்தது.

எல்லோருமே நோயாளிகளாக இருந்தார்கள். தறப்பாள் வெக்கையில் தோல் நோய்களும் இருமல் தடிமன் தும்மல் என்பவற்றோடு காட்டு நுளம்புகளின் கடியும் மலேரியா காய்ச்சலையும் வரவைத்தது. தண்ணீர் எல்லா இடமும் சுத்தமானதாக இல்லாமையாலும் தற்காலிக மலசல கூடங்களின் சுகாதாரமற்ற அமைப்பும் பலருக்கும் வந்திபேதி, வயிற்றோட்டம் முதலிய நோய்களால் பீடிக்கப்பட காரணமாயிற்று.

காயப்பட்டவர்களின் காயங்கள் முறைப்படி மருந்து கட்டவும் தற்காலிக மருத்துவமனைகள் உதவின. இந்தவேளையில்தான் மலையகத்தில் இருந்து இனக்கலவரத்தால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் என அடைக்கலம் புகுந்த மலையகத் தமிழர்களும் வேலையின் நிமித்தமாக கொழும்பு, கண்டி, மலையகம் என வேலை செய்த உத்தியோகத்தர்களும் சிங்கள மருத்துவர்களுக்கும் இராணுவத்திற்கும் மொழிபெயர்ப்பாளர்களாக மாறினர். அவர்கள் சிங்கள மொழியை அறிந்திருந்தனர்.

அங்கிருந்த பெரும்பாலான மலையகத் தமிழர்கள் எழுதப் படிக்கத் தெரியாதிருந்தாலும் சிங்கள மொழியை பேசத்தெரிந்திருந்தனர். இதனால் நன்மை கிடைத்த அதேவேளை தீமையும் கலந்திருந்தது. மருத்துவ அறிவுடனான பேச்சுக்களை புரிந்து நோயாளிக்கு சொல்வதிலும் மருத்துவருக்கு நோயாளி சொல்வதை சரியான முறையில் சொல்வதிலும் சிக்கல்கள் இருந்தன.

வலயம் நான்கில் இருந்த அத்தனை பேருக்குமே மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட பரட்டைத்தலையும் வெற்றிலை குதப்பிய வாயுடனும் இருந்த ஒரு மலையகத் தமிழரின் மொழிபெயர்ப்பு மீது சந்தேகம் எழத்தொடங்கியது. அவன் மொழிபெயர்ப்பு செய்த நபர்கள் மேலும் நோயாளர்களாகவும் சிலர் இறந்தும் போயினர். அவன் சிங்களவர்களுக்கு விசுவாசியாக இருந்தான். இராணுவத்தை வைத்து மக்களை மிரட்டுபவனாக இருந்தான். சிங்கள வைத்தியர்கள் எல்லோரும் வைத்திய தர்மத்தோடு நடக்கவுமில்லை. அவர்களில் சிலரது மனதில் இனத்துவேசம் இருந்தது. அதனால் மருந்து மாத்திரையாலும் எஞ்சி வந்த மனிதர்களை கொன்றனர். இந்த சந்தேகங்களால் வைத்தியசாலைக்குப் போவதென்பது பயமாகவே இருந்தது.

ஆனாலும் நோய் வந்தால் மருந்து எடுத்துத்தானே ஆக வேண்டும். எனது மகளுக்கு காய்ச்சல் வந்தது. அவள் கைக்குழந்தையாகவும் இருந்தாள். கைவசம் இருந்த பனடோல் சிரப், பிறிட்டோன் சிரப்பும் முடிந்து விட்டன. ஆதலால் இரவிரவாக நித்திரை விழிப்பு. அதிகாலை நேரத்தோடு தற்காலிக மருத்துவமனையை அடைந்தேன். ஒன்பது மணியளவில் வைத்தியர்கள் வருகை தந்தார்கள். ஒரு வைத்தியரிடம் பிள்ளையை காட்டி அவளுக்கு காய்ச்சல் என்பதை ஆங்கில மொழியில் தெரியப்படுத்தினேன்.

அவர் நன்றாகப் பரிசோதித்து விட்டு பெரியவர்களுக்கு எழுதுவது போல பனடோலுக்கும் அத்துடன் ப்ளூமன் என்ற மாத்திரையையும் எழுதி அதை எட்டில் ஒரு பங்காக கொடுக்கச் சொன்னார். பனடோல் சிரப், பிறிட்டோன் சிரப் எழுதுங்கள் என்றபோது அவை முடிந்து விட்டன எனக் கூறினார்.

மருந்தெடுக்கும் பகுதியில் நீண்ட வரிசையில் நின்று மருந்தெடுத்தபோது தெரிந்த தாதி ஒருத்தியை தேடினேன். நின்றவர்களிடம் விசாரித்தேன். அவள் அன்று வரவில்லை. மாலை மூன்று மணிக்கு எனது தறப்பாள் கூடாரத்தை அடைந்தேன். பிள்ளைக்கு மருத்துவர் கூறியபடியே மருந்தை கொடுத்து உறங்கவைத்து சாப்பிட்டேன். மனம் ஏதோ எச்சரித்துக் கொண்டிருந்தது. உறங்கி விட்டேன்.

ஆறுமணி போல எழுந்து குளிப்பதற்கு ஆயத்தமானேன். குழந்தை இன்னும் எழும்பவில்லை. காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தது. பிள்ளைக்கு பால் கொடுத்தேன். உணர்வும் உணர்வுமற்ற போராட்டத்தோடு பிள்ளை பசிக்காகப் பாலை அருந்தியது. கண் திறக்கவில்லை.

(சாட்சியம் நீளும்)


# காவிகளின் அரசியலுக்குப் பலியான தமிழ் – முஸ்லிம் இன உறவு

■ மட்டுநேசன்

‘எல்லாப் புகழும் இறைவனுக்கே” - உயரிய விருதான ஒஸ்காரைப் பெற்றபோது இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் உச்சரித்த வார்த்தைகள் இவை. இந்தியாவிலுள்ள அனைத்து மொழி மக்களும் பூரிப்பால் திளைத்த அந்தத் தருணத்தில் தன்னை ஓர் இஸ்லாமியனாகவும் மொழியால் தமிழனாகவும் இனங்காட்டினார் அவர். இதெல்லாம் திட்டமிட்டுச் செய்வதல்ல. அந்த நேர உணர்வு: இறை உணர்வும் மொழி உணர்வும் இயல்பாக வந்த தருணம்.

‘ஒப்புக்குப் போர்த்திய அமைதித் திரையின் ஓரங்கள் பற்றி எரிகின்றன” மற்றும் ‘கானம் இரத்த கானம்” முதலான பாடல்களை எழுதிய இன்குலாப் தனது கவிதைகள் மூலமும் வாழ்க்கை முறை வழியாகவும் தமிழினப் பற்றை வெளிப்படுத்தியவர். உயரிய விருதான சாகித்ய அக்கடமி விருதையே நிராகரித்தவர். (திருப்பி அனுப்பியவர்) கவி அரங்கெனில் முதலில் குறிப்பிடப்படும் பெயர் அப்துல் ரகுமானாக இருந்தது. அவரது ‘சுட்டுவிரல்” கவிதைத் தொகுதி சென்னை மற்றும் மதுரை முதலான பல்கலைக்கழகங்களில் எம்.ஏ. பட்டப்படிப்புக்கான பாடப் புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதில் இரு கவிதைகள் ஈழப் போராட்டம் பற்றியவை. காலதாமதமாக ஆட்சியாளருக்கு இவ்விடயம் தெரியவந்தது. இந்த இரு கவிதைகளையும் இந்நூலில் இருந்து விலக்கி விட்டால் தொடர்ந்து பாடப் புத்தகமாக அங்கீகரிப்போம் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ‘அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை நான் எடுக்க மாட்டேன்” என உறுதியாகச் சொன்னார் அப்துல் ரகுமான்.

பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருந்தும் கொள்கையே பெரிதென நின்றவர் அவர். வித்துவச் செருக்கு இல்லாதவன் மனிதனே அல்ல என்பது கவிஞர் வாலியின் கருத்து (நானும் இந்த நூற்றாண்டும்). அப்துல் ரகுமானுக்கு வித்துவச் செருக்குடன் ஈழப் போராட்டம் பற்றிய நேசிப்பும் இருந்தது. மு.மேத்தாவின் கவிநயமும் இலக்கியப் படைப்பில் தனித்துவமானது. மறைந்த நீதியரசர் மு.மு.இஸ்மாயில் கம்பராமாயணத்தின் பெருமையை எழுத்தின் மூலமும் பேச்சின் வழியாகவும் வெளிப்படுத்தியவர். தற்போது பிரபல பேச்சாளராகத் திகழும் பர்வீன் சுல்தானா தனது பேச்சின் இடையே கம்பராமாயணத்தின் சில பகுதிகளைச் சுட்டிக் காட்டுவதுண்டு. இலங்கையில் மட்டக்களப்பு, மலையகம், யாழ்., மன்னார் போன்று தமிழகத்திலும் பல பேச்சு வழக்குகள் உள்ளன. பிரமாணத்




தமிழ் மற்றும் சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி போலவே கீழைக்கரை முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கில் வடக்கில் தோப்பில் முஹமது மீரான் எழுதி வந்தார். இவரது ‘ஒரு கிராமத்தின் கதை” இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த முஸ்லிம்களைப் பற்றியது.

நான்காவது உலகத் தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலைகள் ஆரம்பிக்கையில் பேராசிரியர் நைனா முஹமதுவின் உரையைக் கேட்டு இன்புற்றுக் கொண்டிருந்தனர் தமிழர்கள். இலங்கையைப் பொறுத்தவரை முத்து மீரானும் மசூர் மௌலானவும் தமது உரைகள் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு உரமூட்டியவர்கள். வேதாந்தி என்ற புனைபெயரில் எழுதி வந்த சேகு இஸ்ஸதீன் என்பவர் நாகேஸ்வரி கணபதிப்பிள்ளையைத் திருமணம் செய்துகொண்டார். கவிதா என்ற புனைபெயரில் எழுதி வந்த நாகேஸ்வரியின் ‘யுகங்கள் கணக்கல்ல” என்ற சிறுகதைத் தொகுதி தமிழ் வாசகப் பரப்பில் பரவலாகப் பேசப்பட்டது. கல்முனையைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் அஷ்ரப் மற்றும் மருதூர் கனி போன்றோர் குறிப்பிடத்தக்க கவிஞர்களாக இனங்காணப்பட்டவர்கள்.

முதல் தமிழ் நாவலை எழுதியவர் அறிஞர் சித்திலெப்பை. அசன்பே சரித்திரம் என்பது இந்நாவலுக்குப் பெயர். இவருக்கு தபால் தலை வெளியிட்டு கௌரவித்தது இலங்கை அரசு. இந்நாவலை அண்மையில் மறுபதிப்பு செய்துள்ளார் பேராசிரியர் நுஃமான். யாழ். நூலக எரிப்புப் பற்றிய ‘புத்தரின்………………..” என்ற கவிதையும் பரவலாகப் பேசப்பட்டது. இளங்கீரன் என்ற பெயரில் எழுதிய சுபைர் வாசகப் பரப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியவர். இவர் எழுதிய நாவல் ஒன்று தினகரனில் நாளாந்தம் தொடராக வெளிவந்தது. அதில் குறிப்பிட்ட பெண் கதாபாத்திரத்தின் பெயரைக் குறிப்பிட்டு, அவள் சாகக்கூடாது என தினகரனுக்கு ஏராளமான தந்திகள் சென்றன. கதை முடியப் போகிறது என வாசகர்கள் உணர்ந்ததனால் இவ்வாறாகத் தந்திகள் அனுப்பினர்.

சங்கிலியன், பண்டார வன்னியன், நபிகள் நாயகம் தலைப்புகளில் காவியங்கள் எழுதியவர் கவிக்கோ ஜின்னா ஷெரிபுதீன். இவர் இறுதியாக எழுதியது எல்லாளன் காவியம். இவரது தந்தை ஆ.மு.ஷெரிபுதீன் பெருங் கவிக்கோ எனப் போற்றப்பட்டவர். நாகூர் இ.எம்.ஹனிபா இஸ்லாமியப் பாடல்களால் மட்டுமல்ல தி.மு.கவின் பாடல்களாலும் அறியப்பட்டவர். அப்துல் மஜித் என்பவர் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் ஆஸ்தான வித்துவானாக விளங்கினார். மற்றொரு நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்ன மௌலானா பல்வேறு இந்துக் கோயில்களில் மட்டுமல்ல ஆடிவேல் உற்சவத்திலும் நாதஸ்வர இசையை வழங்கியவர்.

உலகப் பரப்பெங்கும் தமிழ் அறிவிப்பாளராக கொண்டாப்படு வர் ஏ.எச். அப்துல் ஹமித். இவர் மணம் செய்தது ஒரு பிரமாணப் பெண்ணை. மிகுந்த ஞாபகசக்தி மிக்கவர் அப்துல் ஹமித். அதனைப் பொருத்தமான நேரத்தில் பயன்படுத்துவதிலும் வல்லவர். இளையராஜாவை மட்டம் தட்டுவதற்காக ‘ஓரம்போ போன்ற பாடல்கள் காலத்தால் நிலைக்கமாட்டா” எனக் குறிப்பிட்டார் பிரபல பாடகர் ரி.எம். சௌந்தர்ராஜன். ‘அப்படியானால் ஹிஞ்சினாக்கடி ஹிஞ்சினாக்கடி... பாடல்கள் (ரி.எம்.எஸ் பாடியது) பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டதன் மூலம் மறைமுகமாக ரி.எம்.எஸ்ஸின் மமதையை அவருக்குச் சுட்டிக்காட்டியவர் இவர்.

● ● ●

‘நாம் தமிழர்கள் அல்ல அரபுத் தமிழ் பேசுபவர்கள்” என்கிறார் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா. அடப்பாவி மவனே அப்துல் ஹமீத் கதைப்பதும் அரபுத் தமிழா?

முன்னர் காத்தான்குடி - ஆரையம்பதி எல்லையில் ‘பீத் தமிழனை பீரங்கி கொண்டு அழிப்போம்” என்று எழுதியிருந்தமை ஒரிஜினல் தமிழா? அரபுத் தமிழா?

இன்னொருவர் முன்னாள் அமைச்சர், ஆளுநர் ஹிஸ்புல்லா. இவர் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையினர். இங்கு ஒரு முஸ்லிமே முதலமைச்சராக வேண்டும் என்கிறார். இது நியாயமான கோரிக்கை. அடுத்துவரும் கருத்துக்கள்தான் விஷமத்தனமானவை. ‘கிழக்கில் ஒரு முஸ்லிம் முதலமைச்சரானால் வட,கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோரிக்கை அடிபட்டுப் போகும்”, என்கிறார். உண்மை என்னவெனில் அறவழியில் போராடியோரும் ஆயுதம் தாங்கியோரும் வட,கிழக்கு

(மறுபக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்றே குறிப்பிட்டனர். பேசும் என்ற சொல்லை அகற்றி இக்கோரிக்கையை வைப்பவர்களை முஸ்லிம்களுக்கு எதிரானவர்களாகக் காட்ட முனைந்தார் ஹிஸ்புல்லா.


முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையினர்தான். அண்மைய கணக்கெடுப்பு ஒன்றின்படி அம்பாறையில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 484 பேரும் (43.6 வீதம்), திருமலையில் ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 854 பேரும் (40.4 வீதம்) உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழர் பெரும்பன்மையினர். கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் வேண்டும் என்போர் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ள மாவட்டங்களான அம்பாறை மற்றும் திருமலைக்கு இந்த அரபுத் தமிழைப் பேசுபவரை அரசாங்க அதிபராக நியமிக்க வேண்டும் என ஏன் கோரவில்லை?

யாழ்ப்பாணத்தில் லயனல் பெர்னாண்டோ (1980) இற்குப் பின்னர் தொடர்ச்சியாக தமிழர்களே அரசாங்க அதிபர்களாக விளங்குகின்றனர். மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இதே நிலைமைதான். கல்முனை தமிழ்ப் பிரிவு உதவி அரச அதிபர் பணிமனையை தரமுயர்த்த வேண்டாம் எனக் கோருவதை விட மாவட்டத்துக்கே முஸ்லிம் அரச அதிபர் வேண்டும் எனக் கோருவதிலேயே நியாயமும் உரிமையும் உண்டு. அப்படிக் கோரத் துணிவு இல்லாத ஹிஸ்புல்லா, அதாவுல்லா, ஹாரீஷ், ஜுஃப்ரி பாருக் போன்றோர் தமிழருக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு வருவதில் நியாயமில்லை. தங்களுடைய பயத்தை மறைத்து தமிழருக்கு எதிரான இனவாதத்தைக் கக்குவது புனித குர்ஆன் சொல்லும் தத்துவங்களுக்கு மாறானதல்லவா?

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடி - கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி..., என்ற பாரதியின் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

அம்பாறை பட்டிப்பளையில் அரச மரக் கன்று ஒன்றை நாட்டிய அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க, 'இந்த மரம் வளர்ந்து பெரு விருட்சமாகும்போது இங்கு உங்களைத் தவிர வேறு யாரும் இருக்கக்கூடாது", என குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

புனிதபூமி திட்டத்திற்கு விகாரையின் மணியோசை கேட்கும் நிலமெல்லாம் பௌத்தர்களுக்கு சொந்தம் என்ற நிலைப்பாட்டை சிங்களம் கைவிட்டிருக்கும் என்று தோன்றவில்லை. இந்த நிலையில் அம்பாறை, திருமலைக்கு அரபுத் தமிழ் பேசுபவர்களே அரச அதிபர்களாக வேண்டும் என முணுமுணுத்தால் நிலைமை என்னவாகும் என்பது இந்தப் பிரமுகர்களுக்குத் தெரியாததல்ல. உண்மையில், கல்முனைப் போராட்டங்களை நடத்திய இரு பகுதியினரதும் பொம்மலாட்ட நூல் மஹிந்தவின் கையிலேயே இருந்தது. இரு பகுதியிலும் மஹிந்தவின் விசுவாசிகளே தலைமை தாங்கினர். ஒருபுறம் அதாவுல்லா போன்றோர். மறுபக்கம் மஹிந்தவின் சில நாள் அமைச்சரவையில் இடம்பெற்ற (பிரதியமைச்சர்) வியாழேந்திரன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவராக விளங்கியவரும் முன்னாள் தேசிய நல்லிணக்க அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன், இனியபாரதி மற்றும் பிள்ளையானின் ஆதரவாளர் குழாமின் கையே ஓங்கியிருந்தது. இவர்களுடன் வட மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவும் இணைந்துகொண்டார். நல்லவேளை ஞானசார தேரரின் தலைமையில் இந்த உண்ணாநோன்பு முடிக்கப்பட்டது. இல்லையேல் கருணாநிதி போல விநாயகமூர்த்தி முரளிதரனும் போராட்ட களத்தில் குதித்திருப்பார்.



அவரது தலைமாட்டில் ஒன்று கால்மாட்டில் மற்றொன்று என நின்று தமிழரின் போராட்டமே சந்தி சிரிக்கும் நிலைக்குப் போயிருக்கும். ஆயுதப் போராட்டத்தை முறியடிக்கத் துணை போன அவரால், மஹிந்த மூலம் இக்கோரிக்கையைச் சாத்தியமாக்கியிருக்க முடியாதா? அப்போது கேட்டிருந்தால் அல்லது தனது செயலாளரிடம் தனக்கு நினைவூட்டும்படி கூறியிருந்தால் இது ஊதித் தள்ளும் அளவுக்கு இலகுவாக இருந்திருக்கும் அல்லவா?

இன்று சட்டியில் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த கதையாகி விட்டதே. பிக்குகளின் வேண்டுகோள் என்பதை விட உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்டது போராட்டம் என்று வெளிவந்த செய்திகளை முழுமையாக நிராகரிக்க முடியுமா? தமிழரின் சாத்வீகப் போராட்டங்கள் காலிமுகத் திடலில் காடையர்களாலும் யாழ். கச்சேரியில் காக்கியினராலும் முறியடிக்கப்பட்டன. கல்முனையிலோ காவியுடைக்காரர்களால் முடித்து வைக்கப்பட்டது.

கிழக்கின் அண்மைக்கால வரலாற்றில் பிக்குகள் செய்த அடாவடிகளை மறக்க முடியுமா? இவர்களுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாமல் பார்வையாளராகவே பொலிஸார் நின்ற சம்பவங்களைப் பட்டியல் போட முடியும். தமது நோக்கத்தை ஞானசார தேரர் கடந்த 23 ஆம் திகதி நீர்கொழும்பு கட்டுப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார், 'தனிச் சிங்கள அரசை நிர்மாணிப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நமக்கு ஆதரவு வழங்கும் கத்தோலிக்கத் தமிழர், முஸ்லிம்களை இணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டும்.", என்பதே அவரது கருத்து. இதிலிருந்து அவர் கல்முனைக்கு விஜயம் செய்ததன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளலாம்.

• • •

நாடாளுமன்றத்தில் உயர்த்திய கைகளை கீழிறக்க முடியவில்லை கூட்டமைப்பினரால். வரவு - செலவுத் திட்டங்கள், ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, அவசரகாலப் பிரகடனம் போன்றவற்றில் ஐ.தே.க. என்ன நிலைப்பாடு எடுக்கிறதோ அதுதான் கூட்டமைப்பினதும். எஜமான் படத்தில், 'கல்யாணம்னா நான்தான் மாப்பிள்ளை: சாவு வீடுன்னா நான்தான் பிணம்", என்பார் நெப்போலியன். அதே பாணியில் அரசியல் நடத்துகிறார் சுமந்திரன், 'நாங்கள் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அரசுக்கு ஆதரவு அளிப்போம்" என ஒரு தடவை சொன்னார் சிறிதரன். ஆனால் நாம் ஆதரவளிக்க எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை என்று மறுத்தான் கொடுத்தார் சுமந்திரன். சாப்பிட மட்டுமே வாயைத் திற என்பதுதான் அவர் சிறிதரனுக்குச் சொன்ன செய்தியின் சாரம். சிறிதரன் சொன்ன விடயங்களில் அரசியல் கைதிகளின் விடுதலையும் அடங்கும். அந்த விடயங்களை முழுமையாக சுமந்திரனே கையாண்டார். 19 வருடங்களாக சிறையில் இருந்த முத்தையா சகாதேவன் (வயது 61) ஒரு சில தினங்களுக்கு முன்னர் காலமானார். அரசியல் கைதிகளின் விடயத்தில் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியவில்லை. அக்காலகட்டங்களில் கல்முனை விவகாரத்தையேனும் சாத்தியமாக்கி இருக்கலாம் அல்லவா? உண்மையில் கட்சிக்குப் பின்னால் மக்கள் என்பதைவிட மக்களுக்குப் பின்னால் தாம் நிற்கிறோம் என்று காட்டவே நிற்கிறது கூட்டமைப்பு. இரணைதீவு, கேப்பாபிலவு போன்ற போராட்டங்களின் வரிசையில் மக்களுக்குப் பின் நிற்க முயன்று கல்முனையில் அவமானப்பட்டது.

ஜெனிவாவில் அரசுக்கு கால அவகாசம் பெற்றுக் கொடுக்க எடுத்த முயற்சிகளின்போதுகூட பேரம் என்பதே நடக்கவில்லை. அரசுடன்தான் என்றில்லை முஸ்லிம் காங்கிரஸுடன்கூட அப்படித்தான். கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிமை முதல்வராக்கியமை காலத்தின் தேவைதான். ஆனால் தமிழர் தரப்புக்கு நன்மையளிக்கும் இலக்கில் கல்முனை விவகாரம், இனப்படுகொலை தீர்மானத்தை சபையில் நிறைவேற்றுவது என்று மு.காவுடன் ஏன் பேரம் பேசவில்லை. மாறாக இனப்படுகொலை என்ற தீர்மானத்தை கொண்டுவந்ததற்காக வடக்கு முதல்வரை எப்படியெல்லாம் அவமானப்படுத்தினர் சுமந்திரனும் அவரது தொண்டரடிப் பொடியாழ்வார்களும். உண்மையில் தந்தை செல்வா காலத்திலும், பிரபாகரன் காலத்திலும்தான் எதைப் பெற்றுக் கொள்வது என்று பேச்சுக்கள் நடந்தன. மீதி எல்லாக் காலத்திலும் எதை விட்டுக் கொடுப்பது என்றே பேச்சுக்கள் நடந்தன. நடக்கின்றன. இந்த மக்கள் மத்தியில் வாழாத போராட்டத்தின் வலி தெரியாத சுமந்திரன் போன்றோர் தலைப்பாகை கட்டி நிற்பதால்தான் கல்முனையில் அவமானப்பட நேர்ந்தது.

கல்முனை விவகாரம் திசை திரும்பி விட்டது என்ற யதார்த்தத்தை தமிழர்களும் முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுனாமியில் உயிரிழந்து கரையொதுங்கிய பெண்களின் சடலங்களை மிகக் கௌரவமான முறையில் முஸ்லிம் இளைஞர்கள் தமிழர்களிடம் ஒப்படைத்தனர் என்றும் சடலங்களில் இருந்த நகைகள் அப்படியே காணப்பட்டன எனவும் திருக்கோவிலைச் சேர்ந்த ஆனந்த போடியார் குறிப்பிட்டமை மறக்க முடியாத விடயம். இனவுணர்வுக்காக இன்னொரு சுனாமியை எதிர்பார்க்காமல் இரு பகுதியினரும் தாமாக யோசித்து தீர்வு காண வேண்டும். அரபுத் தமிழ் போன்ற கோமாளிக் கருத்துக்கள் தூக்கி எறியப்படட்டும். தமிழ் பேசும் மக்கள் என்ற உணர்வு மேலோங்கட்டும். •

# தேடும் கண்கள்



**கீரி** பலம் :
வைல்ட் ஸ்ரீலங்கா சஞ்சீவ ரத்நாயக்க



## அரசவால் ஈ பிடிப்பான்

ஆங்கிலம் : Indian Paradise Flycatcher
உயிரியல் : Terpsiphone paradisi

அரசவால் ஈ பிடிப்பான் ஆசியக் கண்டத்தை தாயகமாகக் கொண்ட பறவையினமாகும்.


கறுப்பு நிறத் தலையைக் கொண்ட இந்தப் பறவைகள் செம்மஞ்சள் நிறத்தில் அல்லது முழுமையான வெள்ளை நிறத்தில் காணப்படும். செம்மஞ்சள் நிறம் கொண்ட பறவையின் மார்பு வெள்ளை நிறத்தில் காணப்படும்.

ஆண் பறவையினத்துக்கே நீண்ட வால் காணப்படும். பெண் பறவைக்கு குட்டையான வாலே இருக்கும்.


உயரமான மரங்கள் அல்லது மின் கம்பங்களில் அமர்ந்திருந்து வானத்தையே அவதானித்துக் கொண்டிருக்கும். பறந்து கொண்டிருக்கும் தும்பி, குளவி, தேனீ, வண்ணத்துப் பூச்சி மற்றும் பூச்சியினங்களை அப்படியே பறந்தபடியே பிடித்து அதைக் கொன்று உண்ணும்.

கூடு கட்டி இனம்பெருக்கும் இந்தப் பறவையின் இனப்பெருக்க காலம் மே - ஜூலை வரை. 3-4 முட்டைகளை இடும். 21 - 23 நாட்களில் முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளிவரும். 14 - 16 நாட்களில் குஞ்சுகள் உணவுக்காக பெற்றோரைத் தங்கியிருக்கும். அதன் பின்னர் தனியாகப் பறந்துவிடும்.

இலங்கையின் விசேடமான பறவையினங்களில் அரசவால் ஈ பிடிப்பானுக்கு தனி இடம் உண்டு.



**பூநாரை** படம் :
வைல்ட் ஸ்ரீலங்கா ஹரி சுதர்சன்



**சிறுத்தை** படம் :
வைல்ட் ஸ்ரீலங்கா ரிஷ்நாத் ஹுசைன்




**தையல் சிட்டு** படம் :
வைல்ட் ஸ்ரீலங்கா சஞ்சீவ ரத்நாயக்க



**அரசவால் ஈ பிடிப்பாய்** படம் :
வைல்ட் ஸ்ரீலங்கா ஜெய் போட்டோகிராபி

# நிலை தடுமாறும்...

(18ஆம் பக்கம் பார்க்க)

இந்த நிலையில் இலங்கை நாடாளு மன்றத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக உருவாக்கப்படும் சட்டங்களின் நம்பகத் தன்மை எவ்வாறானதாக இருக்கும்?

1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டமும் அதன் கீழான மாகாண சபை முறைகளும் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் அதற்குரிய அதிகாரங்கள் சரியான முறையில் கடந்த முப்பது ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பிலுள்ளன. தற்போது மாகாண சபைகளைக் கைவிடும் ஆபத்தும் நேரிட்டுள்ளது. இந்த நிலையில் சர்வதேச ஆதரவுடன் 2016இல் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தையே தவறு என்கிறார் மைத்திரிபல சிறிசேன. அவர் ஜனாதிபதியாக வந்ததே சர்வதேசத்தின் ஆதரவுடன்தான்.

எனவே தங்களுக்கு ஏற்ற பூகோள அரசியல் சிந்தனையோடு மாத்திரம் அமெரிக்கா போன்ற மேற்குலகமும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் செயற்படுவதைத் தவிர்த்து, இலங்கைத் தீவில முப்பது வருட ஆயுதப் போர் ஏன் நடந்தது என்ற உண்மையைத் தெரிந்தும் தெரியாதது போன்று நடிப்பதை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் இயல்பாகவே எழுகின்றன.

கண்டியக் கலாசாரத்தை மையப்படுத்திய, பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுத்துள்ள இலங்கை ஒற்றையாட்சி முறையில் இருந்து வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசத்துக்கு அதிகாரங்கள் பங்கிடப்படாமல், இலங்கையில் நேர்மையான அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் தென்படாது என்பதை மக்கள் நம்புகின்றனர்.


எனவே பூகோள அரசியல் போட்டிகளுக்குள் சிக்குண்டுள்ள சிங்கள ஆட்சியாளர்களும் தமது நலன்களுக்கான பூகோள அரசியலை இலங்கைத் தீவில் முன்னெடுக்க முடியாமல் தடுமாறும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் இந்தியாவும், இலங்கை ஒற்றையாட்சி முறையில் இருந்து அதிகாரங்கள் பங்கிடப்பட்டால் மாத்திரமே மாற்றம் சாத்தியமாகும் என்பதை இனியாவது உணர வேண்டும்.



குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியரான ஷாபிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி போராட்டம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.




போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலான நடைபவனி ஒன்று திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



மன்னாரில் மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நல்லிணக்க வழிப்புணர்வு நிகழ்வு மன்னார் - சித்தி விநாயகர் இந்துத் தேசியப் பாடசாலையில் நடைபெற்றுள்ளது.

## வாரபலன்

### மேடம்
பணப்புழக்கம் சுமாராகவே இருக்கும். புதிய கடன்களை வாங்க வேண்டாம். குடும்ப அந்தஸ்து உயரும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் கவனத்துடன் ஈடுபடவும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகமாகும்.

### ரிஷபம்
பணப்புழக்கம் நன்றாக இருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். மனதில் சிறு குழப்பங்கள், சஞ்சலங்கள் உண்டாகும். வியாபாரிகளுக்கு பழைய கடன்கள் வசூலாகும். விவசாயிகள் சிறு சங்கடங்களைச் சந்திக்க நேரிடும்.

### மிதுனம்
பொருளாதார நிலைமை நன்றாக இருக்கும். நினைத்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் தமது வேலைகளில் மாற்றங்களைக் காண்பார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் சுமுகமாக முடியும்.

### கடகம்
நல்லவர்களின் நட்பு கிடைக்கும். சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும். உத்தியோகதர்கள் சக ஊழியர்களிடம் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். வியாபாரிகளுக்கு விற்பனை அதிகரிக்கும்.

### சிம்மம்
எதிர்படும் இடையூறுகளைத் தகர்ப்பீர்கள். பிரச்சினைகளில் தெளிவுகள் தென்படும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் நிலவி வந்த பிரச்சினைகள் குறையும். வியாபாரிகளுக்கு இருந்து வந்த அலைச்சல் குறையும்.

### கன்னி
திட்டமிட்ட காரியங்களில் வெற்றியடைவீர்கள். நம்பிக்கையுடன் ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சிரமமற்றுப் பணிகளைத் தொடரலாம். வியாபாரிகளுக்கு கடன் சுமைகள் குறையும்.

### துலாம்
திட்டமிட்ட காரியங்களில் வெற்றியடைவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் விரும்பிய இடமாற்றத்தைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு கடன் சுமைகள் குறையும்.

### விருச்சிகம்
வரவுக்கேற்ற செலவுகள் ஏற்படும். முக்கிய முடிவுகளை தற்போது எடுக்க வேண்டாம். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பிரச்னைகளில் சிக்கல்கள் உருவாகும். உத்தியோகஸ்தர்கள் பணி சீராகும்.

### தனுசு
தன்னம்பிக்கையோடு காரியங்களில் ஈடுபடுவீர்கள். முக்கியஸ்தர்களின் உதவிகள் கிடைக்கும். பல புதிய வழிகள் தறக்கும் உத்தியோகஸ்தர்களுக்குப் புதிய ஆற்றல் உண்டாகும். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் வளர்ச்சி தென்படும்.

### மகரம்
குடும்பத்தில் அமைதி நிலவும். உறவினர்களிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் பளிச்சிடும். ஆனமிக வழி சிறக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

### கும்பம்
குடும்பத்தில் அமைதி நிலவும். உங்கள் திறமைகள் பளிச்சிடும். அவ்வப்போது சிறு பண விரயங்களும் உண்டாகும். உத்தியோகஸ்தர்களை மேலதிகாரிகள் புரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும்.

### மீனம்
தொழிலில் முன்னேற்றம் தென்படும். இடையிடையே தடைகளும் உண்டாகும். தேவைக்கேற்ற பணவரவு இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகமாகும்.

# புலியை நம்பிய பிராமணன்



**பஞ்சதந்திர கதைகள்**

ஒரு கிழப்புலி, பலவீனத்தால் ஆகாரத்துக்கு வேட்டையாட முடியவில்லை.

ஏரிக்கரையில் தர்ப்பைப் புல்லைக் கையில் வைத்துக் கொண்டு எவனாவது வருகிறானா என்று பார்த்தவாறு அமர்ந்திருந்தது. அந்த நேரம்பார்த்து ஒரு பிராமணன் அந்த வழியாக வந்தான். புலி, அவனைப் பார்த்தது, வாயில் தானாகவே எச்சில் ஊற ஆரம்பித்துவிட்டது.

"ஓ... பிராமணா"....

புலி அவனை அழைத்தது. குரல் எங்கிருந்து வருகிறது என்று சுற்றும் முற்றும் பார்த்தான் பிராமணன். யாரையும் காணவில்லை. புலிதான் தெரிந்தது. "நான்தான் அழைத்தேன் பிராமனோத்தமனே! இந்தா இந்தப் பொற்காப்பை வாங்கிச் செல்" என்று புலி அழைத்தது. பழுத்துப்போன தரப்பைப் புல்லை பட்டமாக்கிக் காட்டியவாறு. ஏழைப்பிராமணன் கண்ணுக்குப் புலி காட்டியது பொன் காப்பாகவே தோன்றியது. காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறம் என்பதுபோல. பொற்காப்பு வலியக் கிடைக்கிறதே என்ற ஆசை அவனை முன்னே தள்ள புலி ஆயிற்றே. கிட்டே போகக் கூடாதே என்ற அச்சம் அவனைத் தயங்க வைத்தது. காப்புமீது ஆசை வைக்கக் கூடாது என்போமானால், புலி கொன்றுவிடுமே என்று அச்சப்பட்டோமானால் மரணத்துக்கு பலவகையிலும் வழி இருக்கிறதே!.

"புலியாரே காப்பெங்கே இருக்கிறது?" என்று கேட்டான் பிராமணன். புலி மஞ்சள் தர்ப்பையை வட்டமாக்கிக் காட்டியது மீண்டும்.

"உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை வரும்? "என்றான் பிராமணன்.

"நான் நகமும் பல்லும் போனவன். கிழவன். காலையில் நீராடி கடவுளைத் தியானித்துக் கொண்டிருக்கிறேன் யாகம் செய்தல், வேதம் ஓதுதல், தானம் கொடுத்தல், தவம் செய்தல், சத்திய நெறியிலிருத்தல். உறுதியான தெய்வ நம்பிக்கை. ஆசையின்மை. பொறுமை முதலிய எட்டு தருமங்களையும் நான் அறிந்தவன். அதன்படி நடப்பவன். இந்தக் காப்பு எனக்கு கிடைத்தது. எதற்கு இது அதனால் இதை யாருக்காவது ஒரு ஏழைக்குக் கொடுக்க நினைத்திருக்கிறேன்."

இப்படிக் கூறியது புலி...

(மீதி அடுத்த வாரம்)

## விடுகதை



1. கிட்ட இருக்கும் பட்டினம். எட்டிப் பார்க்க முடியவில்லை. அது என்ன?
2. குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன?
3. கையில்லாமல் நீந்துவான். காலில்லாமல் ஓடுவான். அது என்ன?
4. கொதிக்கும் கிணற்றில் குதித்து குண்டாகி வருவான். அவன் யார்?
5. ஆயிரம்பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் இல்லை. யார் அவர்கள்?

விடைகள்
1.முதுகு 2.நாக்கு 3.படகு
4.பணியாரம் 5. எறும்புக் கூட்டம்.

## ஒரு குறள் மூன்று விளக்கங்கள்

**குறள் 77 :**

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

**கலைஞர் மு.கருணாநிதி உரை:**

அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காதவரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.

**மு.வரதராசனார் உரை:**

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

சாலமன் பாப்பையா உரை:

எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து கொள்வது போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்ந்து கொல்லும்.

## கேள்விக்கென்ன பதில்?

1. பாம்புக்கு எத்தனை நுரையீரல்கள் உள்ளன?
2. ஒரு குருவியின் கழுத்திலுள்ள எலும்புகள் எத்தனை?
3. நீந்தத் தெரியாத மிருகம் எது?
4. தவளையின் இரத்தம் என்ன நிறம்?
5. மிக விரைவில் இனப்பெருக்கம் செய்யும் பாலூட்டி எது?

விடைகள்
1.இரண்டு 2. 23 3. ஒட்டகம்
4. கருப்பு 5. சுண்டெலி





## சின்னக் குழந்தாய்

**(சிறுவர் பாடல்)**

சின்னக் குழந்தாய் சின்னக் குழந்தாய்
ஒரு சொல் கேட்டிடம்மா
கதிரவன் எழும் முன்னே – தினம்
நீ காலையில் எழுந்திடம்மா
புறத்தூய்மை பேண நன்றாய் நீயும்
குளிர் நீரில் குளித்திடம்மா
அகத்தூய்மை பேண அனுதினமும்
இறைவனை மனதில் நினைத்திடம்மா.

## ஆங்கிலம் கற்போம்




**எதிர்கால வாக்கியங்கள்**

1. I will do a job

நான் ஒரு வேலை செய்வேன்.

நான் ஒரு வேலை செய்கிறேன். (சற்றுப் பிறகு)

2. I won't do a job. (will + not)

நான் ஒரு வேலை செய்ய மாட்டேன்.

மேலுள்ள வாக்கியங்களைப் பாருங்கள். இவை சாதாரண எதிர்கால வாக்கியங்களாகும். இவற்றை ஆங்கிலத்தில் "Simple Future Tense" என்று கூறுவர். இந்த குழசஅ ல் தன்னிலை, முன்னிலை, படர்க்கை மற்றும் ஒருமை, பன்மை எல்லாவற்றிற்கும் "will" என்றே பயன்படுத்தப்படுகிறது.

Positive (Affirmative)

Subject + Auxiliary verb + Main verb


I /You /He /She /It / We / You /They + will + do a job.

Negative

Subject + Auxiliary verb + not + Main verb

I /You /He /She /It /You /We /They + won't + do a job

## தமிழ் அறிவோம்



**மரபுச் சொற்கள்**

**அ**

| | |
|---|---|
| அரக்கப் பரக்க | அவசரம் அவசரமாக அவசரமும் பதற்றமும் |
| அள்ளி இறைத்தல் | அளவுக்கு மேல் செலவழித்தல் |
| அள்ளி விடுதல் | ஒன்றை மிகைப்படுத்திக் கூறுதல் |
| அவசரக் குடுக்கை | ஒரு செயலை அவசரப்பட்டுச் செய்து செய்துவிடுபவன் |

**ஆ**

| | |
|---|---|
| ஆறப் போடுதல் | ஒரு காரியத்தைக் காலந்தாழ்த்தி செய்தல் |
| ஆழம் பார்த்தல் | ஒருவருடைய உள்ளக் கருத்தை அறிந்து செயல்படுதல் |



# கஞ்சி ஆரோக்கியம் மட்டுமல்ல அழகையும் தரும்



வெளிநாடுகளில் இருந்து தினமும் ஓர் உணவு நம் நாட்டுக்கு வருகிறது. ஆனால், நம் வீட்டில் சோறு வடித்த கஞ்சிக்கு இருக்கும் மவுசு குறையவில்லை.

கஞ்சி வெறும் ஆகாரம் மட்டுமல்ல... ஆரோக்கிய பானமும்கூட. முகப்பொலிவு, கூந்தல் பராமரிப்புக்கும் உதவும். சோறு வடித்த கஞ்சியில் மாச் சத்து அதிகம். புரதச் சத்தும் சிறிதளவு இருக்கிறது. அதேநேரம், தவிடு சேர்ந்த அரிசியில் வடித்த கஞ்சியில் விற்றமின் ஈ, விற்றமின் பி, இனோசிட்டால், நார்ச்சத்து, அன்டி அக்ஸிடன்ட் போன்றவை நிறைந்துள்ளன.

"கிளைசெமிக் இண்டெக்ஸ்' அதிகமாக இருப்பதால், நீரிழிவு நோயாளிகள் கஞ்சியைத் தவிர்க்க வேண்டும். குத்தரிசி, கைக்குத்தல் அரிசி சாதத்தில் செய்யப்பட்ட கஞ்சியில், விற்றமின் பி மற்றும் நார்ச்சத்துகள் அதிகளவில் இருக்கின்றன.

ஆரோக்கியமான உடல்நலத்தோடு இருப்பவர்கள் கஞ்சி குடித்ததும், அதற்கேற்ப உடல் உழைப்பு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கொழுப்பு சேர்ந்து, உடல் எடை அதிகரிக்கும். பருமனாக இருப்பவர்களும் கஞ்சியைத் தவிர்க்க வேண்டும். திரவ உணவாக இருப்பதால் மென்று சாப்பிட வாய்ப்பில்லாமல் அப்படியே விழுங்குவோம் அது மிக விரைவாக சமிபாடு அடைந்து விடும். மென்று சாப்பிட முடியாதவர்கள், விழுங்க முடியாதவர்கள், முதியோர், குழந்தைகள் மற்றும் உடல்நலமில்லாதவர்கள் மட்டுமே கஞ்சியை அருந்த வேண்டும்.

# அந்த நாள்களில் இந்த உணவுகள் வேண்டாமே...!

மாதவிடாய் நாள்களின் அவதிகள் அதிகரிக்க, அந்த நாள்களில் உண்ணும் சில உணவுகளும் காரணமாகலாம். வலியிலிருந்து விடுபட, தவிர்க்க வேண்டிய உணவுகளைப் பட்டியல்.

**கொழுப்பு உணவுகள்**

உடலில் வாயு உற்பத்தியை அதிகரிக்கும். ஹோர்மோன் மாற்றங்கள் ஏற்பட்டு, மன அழுத்தம் அதிகரிக்கலாம். அடிவயிற்றில் வலியை ஏற்படுத்துவதுடன், வயிற்றுப்போக்கையும் உண்டாக்கலாம்.

**பதப்படுத்திய உணவுகள்**

உப்பு நிறைந்த பதப்படுத்திய உணவுகள் உடலில் வாயு உற்பத்தியை அதிகரிப்பதுடன், மாதவிடாய்க்கால வலியையும் தீவிரமாக்கும்.

**அதிக மசாலா**

அழற்சிப் பிரச்னையை அதிகப்படுத்தும். மாதவிடாய்க் கால வலியைத் தீவிரமாக்கும்.

**சீனி உணவுகள்**

சீனி வகை உணவுகள் உடலில் இரத்தத்தில் அளவை அதிகரிக்கும் என்பதால், மனநலனில் மாற்றங்கள் ஏற்படும். பதற்றம் அதிகரிக்கும். நோய் எதிர்ப்பு சக்தி சமச்சீரற்று இருக்கும்.


**கோப்பி**

இதிலுள்ள கஃபைன், இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். இதயத்துடிப்பின் இயல்பு மாறலாம். பதற்றமும் அடிவயிற்றுப் பகுதியில் வலியும் அதிகரிக்கும்.

**குளிர்பானங்கள்**

இவற்றின் கார்பனேற்றத் தன்மை, வாயு உற்பத்தியை அதிகரிக்கும். இதனால் மாதவிடாய்க்கால வலி அதிகமாகும்.

# தண்ணீர் எனும் அருமருந்து



பல உடல் உபாதைகளுக்குத் தவறான உணவு முறைகளே காரணம். சமிபாட்டு பிரச்சினை, மலச்சிக்கல், குடற்புழு உருவாதல் போன்ற பல பாதிப்புகளுக்கும் தவறான உணவுப் பழக்கமே காரணம். உணவு முறையை மாற்றுவதுடன், அவ்வப்போது வயிற்றைச் சுத்தப்படுத்துவதன் மூலம் இவற்றைத் தவிர்க்கலாம்.


குடலைச் சுத்தப்படுத்துவது, சமிபாட்டுப் பிரச்சினைகளை சரிசெய்வது தொடங்கி மலச்சிக்கலைத் தவிர்ப்பது, உடல் வறட்சியைத் தவிர்ப்பதுவரை தண்ணீருக்கு மிகப்பெரிய பங்கிருக்கிறது. எனவே, தினமும் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். பெரியவர்கள், 8 முதல் 12 கிளாஸ் வரை தண்ணீர் குடிக்கலாம்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிற மரக்கறியைத் தெரிந்து சாப்பிடுங்கள். வாரத்தின் முதல்நாளிலேயே, அந்த வாரம் முழுவதும் என்ன சாப்பிட வேண்டும் என்பதற்கு அட்டவணை தயாரித்து நடைமுறைப்படுத்துங்கள்.

பழங்கள் மற்றும் மரக்கறிகள் நிறைய சாப்பிட வேண்டும். குறிப்பாக தர்பூசணி, பப்பாளி, கொய்யா போன்ற தாதுச்சத்து மற்றும் விற்றமின் சத்து அதிகமுள்ள பழங்களைத் தவிர்க்கக்கூடாது. இவை, சமிபாட்டுப் பிரச்சினைகளைத் தடுக்கும். மூளையின் செயற்திறனை அதிகரிக்கும். அன்றைய நாள் முழுவதும் புத்துணர்வுடன் செயற்பட உதவும். வெள்ளரிக்காய், கரட், தக்காளி, முளைகட்டிய பயறு, கீரைகள் ஆகியவற்றை சாலட்டாக சாப்பிடலாம்.

காலை, மதியம், இரவு என எந்தவேளையில் நீங்கள் அதிகமாகச் சாப்பிடுகிறீர்களோ, அந்தவேளையில் உணவுக்கு பதிலாக சீனி சேர்க்காத பழச்சாறு குடிக்கலாம். இதனால் உணவின் அளவு குறையும். ஊட்டச்சத்துகளின் அளவு அதிகரிக்கும்.

# சிங்கம் எப்போதுமே சிங்கம்தான்...!



உயிர் பிழைத்திருத்தல் என்ற விடயத்தில்தான் எல்லா உயிரினங்களின் வலிமையும் அடங்கியிருக்கிறது. எப்படிப் பிழைத்திருக்கிறோம் என்பது ஒவ்வோர் உயிரினத்தின் உயிர் பிழைப்புக் கதை. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் எப்படி வாழ்ந்தன, சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எப்படியெல்லாம் மாறின என்பது ஒவ்வோர் உயிருக்குமான வரலாறு. மனிதன், விலங்கு, பறவை, மீன், பூச்சி, புழு என எல்லா உயிரினங்களும் உயிர் பிழைத்திருக்கும் விடயத்தில் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல.

சாம்பியா (Zambia) வனப்பகுதியில் இருக்கிறது லுவாங்வ் (Luangw) தேசிய உயிரியல் பூங்கா. வடக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறு லுவாங்வா (Luangwa River). அந்த வனப்பகுதியில் இருக்கிற எல்லா உயிரினங்களுக்கும் கருணை காட்டுகிற ஒரே ஆறு. காலநிலைக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஒரு நிலப்பகுதி. சிங்கம், யானை, மான், ஆபிரிக்க எருமை, சிறுத்தை, காட்டுப் பூனை, கழுதைப் புலி எனப் பல்வேறு உயிரினங்களைக் கொண்டது. சிங்கக் கூட்டத்தின் தலைவனாக இருப்பதற்குப் பெயர் பிரைட் (Pride).

கூட்டத்திலிருக்கும் ஆண் சிங்கமே கம்பீரமாக இருக்கும். அதைச் சார்ந்தே மற்றக் குடும்ப உறுப்பினர்கள் இருப்பார்கள். பிரைடாக இருக்கிற சிங்கம் எப்போது எங்கே செல்லும், மீண்டும் எப்போது குடும்பத்தைத் தேடிவரும் என்பதெல்லாம் அதன் மன நிலையைப் பொறுத்தது. அதற்கு தலைவன் (Chief) என்ற அடைமொழியும் உண்டு.

சிங்கத்திற்கு இருக்கும் ஒரே எதிரி கழுதைப்புலிக் கூட்டம்தான். ஒரு கழுதைப்புலி கூட்டத்தில் 15 இலிருந்து 20 கழுதைப்புலிகள் வரை இருக்கும். சிங்கத்திற்கும் கழுதைப் புலிகளுக்குமான சண்டைகள் பெரும்பாலும் உணவு விடயத்தில்தான் தொடங்கும். சிங்கம் போராடித் துரத்தி வேட்டையாடுகிற உணவை, கழுதைப் புலிகள் சிரமமேயன்றி எளிதாக உணவாக்கிக் கொள்ளும். இங்கிருந்துதான் இரண்டு விலங்குகளுக்கும் இனப்பிரச்சினையே ஆரம்பிக்கிறது.

கூட்டமாக இருக்கும் கழுதைப் புலிகள் சிங்கத்தின் உணவைக் கூட்டமாகச் சென்று உணவாக்கிக் கொள்ளும். பெண் சிங்கங்களிடமிருந்து எளிதாக உணவைப் பிடுங்கி விடுகிற கழுதைப்புலிகள் ஆண் சிங்கத்திடம் வாலாட்ட முடியாது. பிரைட் வருகிறதென்றால் மற்ற சிங்கங்களே ஒதுங்கி நிற்கும்போது, கழுதைப்புலிகள் தலைதெறிக்க ஓடிவிடும். கழுதைப் புலிகளின் உயிர் பிழைத்திருப்பு அதன் சூழ்ச்சியில் இருக்கிறது. சிங்கத்தின் உயிர் பிழைத்திருப்பு அதனுடைய வீரத்தில் இருக்கிறது.

சிங்கக் குட்டிகள் பிறந்தவுடன் கண் தெரியாது என்பதால், வாசனையை வைத்து தாய் சிங்கத்தின் மடியில் தாய்ப்பாலைக் குடிக்கின்றன. சிங்கம் தன்னுடைய குட்டிகளை மிகுந்த பாதுகாப்புடன் பாதுகாக்கிறது. வேட்டைக்குப் போகும் சிங்கம் வேட்டையாடிவிட்டு மீண்டும் தன் குட்டிகளுடன் நேரத்தைச் செலவிடுகிறது. குட்டிகளை மிகுந்த பாதுகாப்புடன் சிங்கங்கள் வளர்க்கும். மூத்த சகோதரர்களால் குட்டி சிங்கங்களுக்கு ஆபத்து நேருவதற்கும் வாய்ப்பிருக்கிறது. சிறுத்தைகளிடமிருந்தும், கழுதைப் புலிகளிடமிருந்தும் சிங்கங்கள் வேண்டுமானால் தப்பிப் பிழைக்கலாம். ஆனால் சிங்கக் குட்டிகளால் அவ்வளவு எளிதில் தப்பித்துச் செல்ல இயலாது. உயிர் பிழைத்திருப்பு விடயத்தில் எல்லா உயிரினங்களும் அத்துமீறுபவைதாம்.


சிங்கத்தின் கர்ஜனை 8 கிலோமீற்றருக்குத் தெளிவாகக் கேட்கும். டெசிபல் அளவின்படி ட்ரில்லிங் மிஷின் ஒலியின் அளவை விட 114 மடங்கு அதிக ஒலியை ஆண் சிங்கம் எழுப்பும். அதனுடைய எல்லைக்குப் பாதுகாப்புக்காக 'சார்ஜ்' எடுத்திருக்கிறேன் என அங்கிருக்கிற எல்லா விலங்குகளுக்கும் கர்ஜனை மூலம் செய்தியைச் சொல்லும். ஒருவேளை உத்தரவின்றி வேறு யாராவது உள்ளே நுழைந்திருந்தால் உடனே கிளம்ப வேண்டியதுதான்.

ஆண் சிங்கங்கள் தன் கூட்டத்துக்கு என்று ஒரு எல்லையை உருவாக்கி வைத்துக் கொள்ளும். இதைத்





தன்
மூல
மரங்
மற்ற
கூட்
கூட்
இரு
ஐந்
வய
கூட்
அதி
ஒரு
எல்
இரு
எ
எல்
உயி
இட
அப்
காட்
சிங்
ஆற்
ஆர
கதை
முடி



தன் வட்டத்தில் மலம், சிறுநீர் கழிப்பதன் மூலமும் கர்ஜிப்பதன் மூலமும் தன் நகத்தால் மரங்களில் கீறியும், இது தன் எல்லை என மற்ற சிங்கங்களுக்குத் தெரிவிக்கிறது. சிங்கக் கூட்டத்தின் தலைவனோ தலைவியோ கூட்டத்தின் ஓர் அங்கத்தினராகவே இருக்கவேண்டும். ஒரு கூட்டத்தில் பொதுவாக ஐந்து ஆறு வயதுவந்த பெண் சிங்கங்களும், ஒரு வயது வந்த ஆணும் சில குட்டிகளும் இருக்கும். கூட்டத்தின் அமைப்பில் பெண் சிங்கங்களே அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒரு கூட்டத்தில் இருக்கும் பெண் சிங்கங்கள் எல்லாம் நெருங்கிய உறவினர்களாகவே இருக்கும்.

எல்லாமே வசந்தகாலம் வரைதான். எல்லா உயிரினங்களும் கோடைக்காலத்தில் உயிர்பிழைக்க வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து ஓடியாக வேண்டும். அப்படி உயிர்பிழைப்பதற்காக ஓடுகிற காட்டு எருதுகள்தான், கோடை காலத்தில் சிங்கங்களின் இரை. கோடை காலம் லுவாங்வா ஆற்றுநீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்ற ஆரம்பிக்கிறது. விலங்குகள் அந்த நிலத்தில் கடைசியாக இருக்கிற புற்களைச் சாப்பிட்டு முடித்திருந்தன. அந்த வருடத்தின் கடினமான காலமாக செப்ரெம்பர் மாதம் இருக்கிறது. ஆற்றின் ஓரத்தில் சிங்கங்கள் தங்களின் இரைக்காகக் காத்திருக்கின்றன. குடும்பமாக இருக்கிற கூட்டத்தில் தாய் சிங்கமும் அதன் ஒரு குட்டியும் இருக்கின்றன.

எப்படியேனும் தண்ணீர்தேடி விலங்குகள் வரும் என்பது அவற்றின் நம்பிக்கையாக இருக்கிறது. ஆற்றின் மறு கரையில் இருக்கிற மான்களை வேட்டையாட முயல்கின்றன. ஆனால் அதுவும் தோல்வியில் முடிகிறது. ஆனாலும் சோர்ந்து போகாத சிங்கங்கள் அங்கேயே தங்குகின்றன. ஏனெனில் மிகப் பெரிய இரைக்கூட்டம் இந்தக் காலகட்டத்தில் ஆற்றைக் கடக்கும் என்பது அவற்றிற்குத் தெரிந்திருந்தது.

வறட்சியில் இடம்பெயர்கிற காட்டு எருதுகளும், யானைகளும் ஆற்றின் வழியாகத்தான் பயணங்களைக் கடந்தாக வேண்டும். அதிலும் எளிதாக, மெதுவாக எருதுகளை வீழ்த்திவிடலாம். எவ்வளவு எளிதாக வேலை முடிகிறதோ அதைவிட அதில் ஆபத்தும் இருக்கிறது. எருதுகள் தங்களின் கொம்புகளால் சிங்கங்களைத் தாக்கவும் வாய்ப்பிருக்கிறது. பகல் - இரவு என எருதுகளை எதிர்பார்த்து சிங்கங்கள் காத்திருக்கின்றன. காற்றின் சூடு குறைந்திருக்கும் இரவு வேளையில் எருதுகளின் கூட்டம் ஆற்றங்கரையை நோக்கி வர ஆரம்பிக்கின்றன. அதற்காகவே காத்திருந்த சிங்கக்கூட்டம் எருது கூட்டத்தில் ஒன்றைக் குறிவைத்துத் துரத்துகின்றன.

தாய் சிங்கம் குட்டியோடு கூட்டத்தைப் பின்தொடர்ந்து ஓடுகிறது. மொத்த சிங்கங்களும் ‘சுற்றுப்போட்டு’ விடுகின்றன. தாய் சிங்கம் பாய்ந்து எருதின் கழுத்தைப் பிடித்துவிடுகிறது. சிங்கங்கள் எளிதாக எருதை வேட்டையாடி உணவாக்கிக் கொள்கின்றன. குட்டி சிங்கங்களும் பெரிய சிங்கங்களோடு எருதைப் பங்கிட்டுக் கொள்கின்றன. அடுத்த நாள் வேட்டையாடி மிச்சமிருக்கும் உடற்பாகங்களை, காட்டிலுள்ள செந்நாய்கள், கழுதைப்புலிகள், பிணந்தின்னிக் கழுகுகள் என எல்லாம் உணவாக்கிக் கொள்கின்றன. வேட்டையாடிய விலங்குகளை முழுவதுமாக உண்ணாமல் எலும்பு மற்றும் அதனை ஒட்டிய சதைப்பகுதிகளை அப்படியே சிங்கங்கள் விட்டுவிடும். இயற்கையின் உணவு சங்கிலி இதுதான். பெரும்பாலும் பெண் சிங்கங்களே வேட்டையாடும்.


நன்கு உண்ட சிங்கம் வேட்டைக்குப் பின்னர் பல நாள்களுக்கு வேட்டையாடுவதில்லை. ஆற்றுப்படுகை, சிங்கங்களுக்கு ஓய்வெடுக்கச் சிறந்த இடமாக இருக்கிறது. காட்டு எருதை வேட்டையாடிய களைப்பில் எல்லாச் சிங்கங்களும் ஓய்வெடுக்கின்றன. எருதை வேட்டையாடும்போது தாய் சிங்கம் காயம்பட்டிருப்பது அடுத்த நாள்தான் மற்றவர்களுக்குத் தெரிந்தது. அதன் குட்டி அதனோடு படுத்துத் தூங்குகிறது. காயத்தோடு தாய் சிங்கம் படுத்திருந்தது. நான்கு நாள்கள் தாண்டி விட்டது.


இப்போதைக்குக் குட்டி சிங்கத்திற்கு இருக்கிற ஒரே நம்பிக்கை தாயும், அதனுடைய பாலும்தான். இன்னும் நான்கைந்து மாதத்திற்குக் குட்டிக்குத் தாய்ப்பால் அவசியம் தேவைப்படுகிறது. சிங்கத்தின் குட்டி பசியின் தீவிரத்தால் தாயிடம் பால் குடிக்க முயல்கிறது. காயம்பட்டு வலியில் கிடக்கிற தாய் சிங்கம் குட்டியைத் தள்ளி விடுகிறது. ஆனால், விதி விடுவதாக இல்லை. தாய் உயிர்பிழைக்க உடலோடு போராடிக் கொண்டிருக்கிறது. குட்டி உயிர் பிழைக்கத் தாயின் மடியில் போராடிக்கொண்டிருக்கிறது. தன்னிடம் பால் இல்லை என்றாலும் தாய் சிங்கம், குட்டி சிங்கத்தை நாக்கால் தடவிக்கொடுக்கிறது. அப்போதைக்கு குட்டி சிங்கத்திற்கு அந்த அரவணைப்பு தேவையானதாகவும் போதுமானதாகவும் இருக்கிறது. எருதை வேட்டையாடிய நினைவுகளைத் தவிர சிங்கங்களுக்கு இப்போதைக்கு வேறு உணவு இல்லை.

‘உயிர் பிழைப்பு எப்போதும் பசியை நினைவுபடுத்திக்” கொண்டே இருக்கும். பசி எல்லா உயிரினங்களுக்கும் ஒரு எல்லைக் கோட்டை வகுத்திருக்கும். அதைத் தாண்டும் போதுதான் இரத்தம், காயம், உயிரிழப்பு எல்லாமே. அந்த எல்லைக் கோட்டை தாண்டி ‘நான் ராஜா’ ஆன விலங்குகள் மிகக் குறைவு!










# நாக விளக்கு

நாக விளக்கு தூண்டாமணி விளக்கு வகையைச் சார்ந்தது. இதில் மூன்று திரிகளை வைத்து எரிக்க முடியும். நாகபாம்பு படம் எடுத்து நிற்பது போல இந்த விளக்கின் உருவம் காணப்படுவதால், நாக விளக்கு என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

தமிழர் பயன்படுத்திய தொன்மையான விளக்குகளில் இதுவும் ஒன்று. பொதுவாக தூண்டாமணி விளக்குகள் கொழுக்கிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் வகையிலேயே உருவாக்கப்படும். ஆனால் இந்த விளக்கு விழுந்துவிடாது இருக்குமாறு பாதத்தில் நிற்குமாறு அறிவியல் முறையில் இந்த விளக்கு உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பு.



# வெட்டுக்களி குளம்

நெடுந்தீவின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது வெட்டுக்களி குளம். மழை காலத்தில் நீர் நிறைந்து காணப்படும் கோடை காலத்தில் வற்றிவிடும். இக் குளம் ஆதிகாலத்தில் பூதங்களைக் கொண்டு வெட்டப்பட்டதாக ஒரு பரம்பரைக் கதை உள்ளது.

வெட்டுக்களி குளத்திற்கும் கடலுக்கும் இடையே கால்வாய் தொடர்பு உள்ளது. தற்போது கடல்நீர் உட்புகுவதை தடுக்க இத் தொடர்பு தடுக்கப்பட்டு விட்டது. நிலத்தடி நீரை பேணுவதற்காக ஆரம்ப காலங்களில் இந்த குளங்கள் அமைக்கப்பட்டன. இன்று நாம் இந்த குளங்களை சரியாக பராமரிக்காமல் விட்டால் எதிர்காலத்தில் நல்ல நீருக்கு பெரும் பஞ்சம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

கிராமம் தோறும் இயன்றளவு குளங்களை அமைத்து பராமரிப்பதன் மூலமும் மரங்களை பேணி ஒரு பசுமை புரட்சியை ஏற்படுத்ததாவிடின் நாமும் எமது எதிர்கால சந்ததியும் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி வரும்.

# கடற்புலிகள்





கடற்புலிகள் என்ற இந்த நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரவின் வெளியீடாக வெளியானது.

இதன் முதற் பதிப்பு மார்கழி *1993* இலும் இரண்டாவது பதிப்பு ஐப்பசி 1995 இலும் வெளியானது.

தமிழரின் போரியல் வரலாற்றில் முக்கிய பாய்ச்சலான கடற்புலிகளின் வரலாற்றைக் கூறுகிறது. அத்துடன் கடற்புலிகளின் பலமாக மாறிய கடற்கரும்புலிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகளும் உள்ளன.

கடற்புலிகளின் வீரசாகசங்கள் பற்றியும் - தமிழரின் நவீன போரியல் வரலாற்றில் கடற்படையின் முக்கியத்துவம் பற்றி உணர வைக்கிறது இந்த நூல். இலங்கையில் இன்று இந்த நூல்கள் கிடைக்காத போதும் இணையங்களில் கிடைக்கிறது.



# பால் றொட்டி

பால் றொட்டி இந்துத் தமிழர்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளில் கட்டாயம் இடம்பெறும் பலகார வகையாகும். பேச்சுவழக்கில் பாலுறட்டி என அழைக்கப்படும்.

மங்கல நிகழ்வுகளின்போது முதலில் செய்யப்படுவது பால் றொட்டியே. இது நன்றாகப் பொங்கி வந்தால் நிகழ்வு எந்த இடையூறும் இன்றி நன்றாக நடக்கும் என்பது நம்பிக்கை. பச்சையரிசி, பாலே இந்த உணவின் மூலப் பொருள்.



# ஆக்கினை

ஆக்கினை என்பதற்கு கட்டளை, தண்டனை, ஆக்ஞை, கட்டைவிரல் என அகராதியில் விளக்கம் கூறினாலும் ஈழத் தமிழர்களின் அகராதியில் அதன் அர்த்தம் துன்பம், கஷ்டம் என்பதுதான்.


கடின அல்லது பிடிக்காத வேலையைச் செய்பவர்கள், 'இது என்ன ஆக்கினை பிடிச்ச வேலையாக் கிடக்கு", 'ஆக்கினை பிடிச்ச வேலை" என்று புலம்புவார்கள்.

இதுவே, ஒருவர் ஏனையவருக்கு தொடர்ந்து துன்பங்களை கொடுப்பவரை, 'ஆக்கினை பிடிச்சவன்", என்று திட்டுவதும் உண்டு.

ஈழத்து வழக்கில் ஒட்டிவிட்ட ஆக்கினை என்ற இந்தச் சொல், முதியவர்களிடையே அதிகம் பயன்பாட்டில் உள்ளது. இன்றைய இளையவர்களில் சிலரிடமும் இந்தச் சொல் புழக்கத்தில் உள்ள போதும் எதிர்காலத்தில் நிலைத்து நிற்குமா என்பது கேள்விக்குறிதான்.

# இசைக்கச் செய்யும் இசை

- அருண்





தமிழ்த் திரையிசைப் பாடல்கள் குறித்த நூல்கள் பல அவ்வப்போது வெளி வந்து கவனயீர்ப்பை பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. எனக்குப் பாடல்களைக் கேட்டு ரசிக்கத் தெரியுமே தவிர பாடலின் உட் சூட்சுமங்கள் குறித்தோ இசையின் பல்பரிமாணங்கள் குறித்தோ பெரும்பாலும் அறிந்திருக்கவில்லை. மிஞ்சிப் போனால் ஒரு பாடல் இடம்பெற்ற திரைப்படம், அதனைப் பாடியவர் பெயர், இசையமைப்பாளர் பெயர் என்பவை குறித்து ஓரளவு அறிந்து வைத்துள்ளேன். அதுவும் ஏ.ஆர். ரஹ்மானின் வருகைக்குப் பிந்திய பாடல்கள் குறித்துத் தான். அதற்கு முன்னதான இசையமைப்பாளர்கள் குறித்து அறிய வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் அவை குறித்து வெளிவந்த நூல்கள் எனக்குக் கிடைக்காததும் ஒரு காரணம் எனலாம். ஆனாலும் 'உயிர்மை' இதழில் ஷாஜி எழுதிய இசையமைப்பாளர்கள், பின்னணிப்பாடகர்கள் குறித்து எழுதிய கட்டுரைகள் வாயிலாகவே பாடல்களில் இத்தனை நுணுக்கங்கள் இருக்கின்றனவா என்ற பிரமிப்பும் ஏற்பட்டது. அதன் பின்னர் ஷாஜியின் புத்தகங்கள் அனைத்தையும் வாங்கியதோடு திரையிசைப்பாடல்கள் குறித்து எந்தநூல்கள் வந்தாலும் பெரும்பாலும் நான் தவறவிடுவதேயில்லை.

அந்தவகையில் கருந்தேள் ராஜேஷ் எழுதிய 'இசைக்கச் செய்யும் இசை' நூல் அண்மையில் தான் எனது கைகளுக்குக் கிட்டியது. நூலாசிரியர் திரையிசைப்பாடல்களின் வரலாறு குறித்தல்லாமல் தனது ரசனை அடிப்படையில் தனக்குப் பிடித்த இசையமைப்பாளர்கள், பின்னணிப்பாடகர்கள் குறித்து விலாவாரியாக எழுதியுள்ளார். முதற்கட்டுரையே ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர். ரஹ்மான் பற்றிய கட்டுரை என்பதால் எனது ஆர்வம் இன்னும் அதிகமாகியது. பெரும்பாலும் ஏ.ஆர். ரஹ்மானின் சூபி இசை பற்றியதாகவே கட்டுரைகள் அமைந்திருந்தமை அவரின் இன்னொரு பரிமாணத்தை எனக்கு அறிய வைத்தது. தமிழ்த்திரையில் ரஹ்மானுக்கு முன்னதாக சாதனைகள் பல படைத்த தியாகராஜ பாகவதர், மெல்லிசை மன்னர் விஸ்வநாதன், இசைஞானி இளையராஜா போன்றவர்கள் குறித்தும் கட்டுரைகள் அமைந்திருப்பது கடந்து வந்த திரையிசை வரலாற்றின் சில பக்கங்களைப் புரட்டிப்பார்ப்பதற்கு உதவுகின்றது எனலாம். பழைய பாடல்கள் குறித்த பல்வேறு தகவல்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன.

கஸல் குறித்தும் வடஇந்தியப் பாடகர்கள் குறித்தும் ஏழு கட்டுரைகள் அமைகின்றன. தமிழ் தவிர வேறு எந்த மொழிப் பாடல்களையும் கேளாத எனக்கு ஹிந்திப் பாடல்களும், படத்தின் பெயர்களும் வாயில் கூழாங்கற்கள் போட்டது போல் படிப்பதற்கே மென்று துப்ப வேண்டியதாக இருந்தது. நூலில் உள்ள எல்லாப்பாடல்களையும் இணையத்தில் தேடமுடியவில்லை என்றாலும் 'ஜானே ஜானே' என்ற ஜேசுதாஸ் பாட்டைக் கேட்டேன். அருமையாக இருந்தது. இசைக்கு மொழி இல்லாததால்' முயற்சி செய்தால் ஹிந்திப் பாடல்களையும் ரசிக்கலாமெனத் தோன்றுகிறது. ஹிந்தி பாடல்களில் மூன்று வங்காளிகள் செலுத்திய ஆதிக்கம் குறித்தும் அறியக்கூடியதாக உள்ளது. குல்ஸார் கவிதைகள் குறித்தும் சில தகவல்களைத் தந்திருக்கின்றார்.

மொஸார்ட் பற்றிய கட்டுரை அருமை. கட்டுரையை வாசித்ததன் பிற்பாடு Amadeus படம் பார்க்கவேண்டும் போல் இருக்கின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)




உன் வீட்டு வாசலில்
தழும்புகளும் காயங்களுமாய்
நின்றுகொண்டிருக்கும்
அந்த அரச மரம் நானேதான்
அதன் ஆயிரம் நாவுகளும்
காற்றில் படபடத்துக்கொண்டிருப்பதும்
நம் காதலைத்தான்
அதன் கிளைகளில்
நீ அனுப்பிய இரு புறாக்கள்
அமர்ந்துள்ளன பாரேன்
ஒன்றின் பெயர் விருப்பம்
இன்னொன்று விருப்பின்மை
விருப்பின்மை எழுந்து
பறந்துவிடும் போதெல்லாம்
நான் உற்சாகமாகிவிடுகிறேன்
ஆயிரம் இலைகளையும்
ஒன்றோடு ஒன்றாய் உரசி ஓசையிட்டு
களி கூத்தாடுகிறேன்
விருப்பம் பறந்துவிடும்போதோ
புழுக்கம் வந்து அமர்ந்துகொள்கின்றது
என் கிளைகளில் - அன்பே
உன் வீட்டு வாசலில்
நிற்கும் அந்தக் கிளை ஒடிந்த
இலையுதிரும் சோர்வுற்ற மரம்
நானேதான்

- இளங்கோ கிருஸ்ண




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர்
புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெ
வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்ல
sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்ச
முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.






# கிம் கி டுக் : திரை மொழியின் தனி ஆளுமை

- பு.பிரசாந்

எஸ்.ராமகிருஸ்ணன் எழுத்துக்கள் தென்கொரிய திரைப்பட இயக்குனரான கிம் கி டுக்கை (kim ki duk) எனக்கு அறிமுகப் படுத்தியிருந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிம்மின் திரைப்படம் ஒன்றைப் பார்த்தேன். எனது கடந்த காலத் திரைப்பட அனுபவங்களில் இருந்து முற்றிலும் வேறுமாதிரியான ஒரு அனுபவத்தை அது கடத்திச் சென்றிருந்தது. அந்தத் திரைப்படம் தந்த நீண்ட அலைக்கழிவு, பிறகு கிம் கி டுக்கின் திரைப்படங்களைத் தேடிப்பார்ப்பதற்குத் தூண்டிக் கொண்டே இருந்தது.

பொதுவாக அவரது திரைப்படங்கள் வாழ்வின் கறுப்புப் பக்கங்களைச் சமரசமில்லாமல் திரைமொழியாக்கிக் கொண்டு வெளிப்படுகின்றன. பிறர் மீதான வெறுப்பு, பாலியல், வன்முறை சார்ந்த காட்சிகள் பார்வையாளர்களைச் சஞ்சலப்படுத்துவதை தவிர்க்க முடிவதில்லை. திரைப்படத்தைப் பார்க்கும் பலர் திரையரங்கை விட்டு எழுந்து போகவும், விசனப்படவும் செய்திருக்கிறது என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு வாய்ப்பிருக்கிறது. இயல்புக்கு நெருக்கமான காட்சிகள் என்று சொல்கிறார்கள். எனக்கு அதில் ஒரு செயற்கைத் தனம் இருப்பதாகவே படுகிறது. அது சங்கடப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது.

அவரது பெரும்பாலான திரைப்படங்கள், மௌன வெளியில் காட்சிகளாக விரிவதால் எந்த மொழியும் ஒரு பிரச்சினையாக இருப்பதில்லை. இங்கு பிரதான மொழியே காட்சிதான். அந்த அளவுக்கு திரைமொழியை அழகாகப் புரிந்து கொண்டு அதை அழகியலுடன் காட்சிகளாக்கிக் கொடுப்பதில் கிம் கி டுக் ஒரு தனி ஆளுமை.

2003ஆம் ஆண்( வெளிவந்த Spring,Summer, Fall,Winter… and Spring என்ற திரைப்படம் ஒரு கவிதை மாதிரி நிகழ்ந்து முடியும். அது தவிரவும் The Isle(2000), Bad Guy(2001), Birdcage Inn(1998), Samaritan Girl(2004), 3 – Iron(2004),

(22ஆம் பக்கம் பார்க்க)

# கட்டடக்கலையில் நுழைவாசல்கள்

**கு.பதீதரன்**
கட்டடக்கலைஞர்

கட்டடக்கலையைப் பொறுத்தவரையில் நுழைவாசல்கள், கதவுகள் எப்போதும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. சிறிய அறையின் வாசல் தொடக்கம் ஒரு நகரத்தின் நுழைவாசல் வரை இவற்றுள் அடங்கும். பாதுகாப்பு, எல்லைகளை வரையறுத்தல் போன்ற காரணிகளைக் கடந்து நுழைவாசல்கள், மனிதர்களை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு பௌதிக ரீதியில் கடந்து செல்வதை உறுதிப்படுத்துகின்றது. இந்தப் பௌதிக மாற்றத்தால் மனித மனங்களில் ஏற்படுகின்ற உளவியல் மாற்றம் முக்கியமானது. அதாவது ஒரு இடத்தை அடைகின்றோம் என்ற உணர்வை இந்த வாசல்கள் அல்லது கதவுகள் தருகின்றன.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் வாசல் என்றவுடன் மனதில் தோன்றுவது வீட்டின்



பிரதான வாசல் ஆகும். பரந்த வெளிகளில் உலாவி விட்டு வீட்டிற்கு வரும் போது மனதில் ஏற்படுகின்ற மாற்றம் காரணமாக வீட்டின் வாசல்கள் எப்போதும் முக்கியத்துவம் பெறுகின்றது. பாரம்பரிய நம்பிக்கை அடிப்படையில் பிரதான வாசலை அமைப்பதற்கு மனையடி சாத்திரத்தை நம்புவதும், அதற்காக பிரத்தியேகமான மரங்களைப் பயன்படுத்துவதும், அதன்படி வாசல் அமைப்பதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

வீட்டு வாசல்கள் தவிர ஊர்களுக்கு வாசல்கள் அமைப்பது பல நூறு ஆண்டு காலமாக வழக்கத்தில் உள்ளது. ஊரின் வாசல்கள் அமைக்கும் போது குறித்த ஊரில் உள்ள மக்களின் மத நம்பிக்கைகள், பண்பாடு மற்றும் பொருளாதார வளம் என்பவற்றைப் பொறுத்து வாசல்கள் அமைவதுண்டு. கோட்டை அமைத்து, அதற்கு வாசல்கள் அமைப்பது இலங்கையில் ஐரோப்பியர்கள் அறிமுகப்படுத்திய குடியிருப்பிற்கான வாசல்களுக்கு நல்ல உதாரணம் ஆகும். தமிழ்நாட்டில் கோவில்களை அடிப்படையாகக் கொண்ட நகரங்களில் கோபுரங்கள் அந்த நகரத்தின் வாசல்களாக இருக்கின்றன. இதற்கு உதாரணமாக மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் வீதிகளில் காணப்படுகின்ற கோபுரங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் ஊருக்கான வாசல்கள் என்று பிரத்தியேகமாக இல்லாது இருப்பினும் பிற்பட்ட காலத்தில் தமிழர் பிரதேசங்களிலும் ஊருக்கு வாசல்கள் அமைக்கும் வழக்கம் உருவாகியது, உதாரணமாக யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிரதேசங்களிலுள்ள வரவேற்பு வாசல்களை உதாரணமாக கொள்ளலாம்.

இவற்றைப்போல் பிரபலமான வாசல்கள் உலகெங்கும் உள்ளன. இந்தியாவின் மும்பையில் பிரித்தானிய அரசின் 5 ஆம் ஜோர்ச் மற்றும் அவரது பாரியார் 1911 இல் இந்தியாவிற்கு தரையிறங்கிய நினைவாக கடலின் அருகில் வாசல் அமைத்து அதனை கேற் வே ஒப் இந்தியா மும்பாய் (Gate of India Mumbai) என்று அழைப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊருக்கு பல வாசல்கள் இருக்கின்ற போதும் குறிப்பாக பிரதான வாசல்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து. வாசல்கள் அமைக்கும் வழங்கம் உள்ளது. இவ்வாறான வாசல்கள் ஊர்களை இலகுவில் அடையாளம் காட்டும் குறியீடுகளாக மாற்றம் கண்டுள்ளமையையும் குறிப்பிடத்தக்கது.

எந்த ஒரு கலைப்படைப்பிற்கும் கரு இருக்கும். கலையை ரசிப்பதற்கு அதன் கருவை அறிவது முக்கியமாகும். கட்டடக்கலையைப் பொறுத்த வரையில் படைப்பாளனின் எண்ணத்தில் என்ன இருக்கின்றது என்று அறிந்தால் மட்டுமே அதன் கரு வெளியில் தெரியும் அல்லாது போனால் பார்ப்பவர்களுக்கு ஒரு அழகான கட்டடமாகவே தெரியும். கரு இல்லாத எந்தக் கலைப்படைப்பும் அழகாக இருப்பதில்லை.

இன்றைய காலத்தில் ஏனைய கலைத்துறைகள் தமிழர் மத்தியில் வளர்ந்தது போல் கட்டடக்கலை குறிப்பிடக்கூடிய வளர்ச்சி காணவில்லை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டடக்கலையில் பல சாதனைகளைப் புரிந்த தமிழர்கள் இன்று மேற்குலக கட்டடக்கலைப் பாணிகளைப் (Architecture style) பின்பற்றியே அதிக கட்டடங்களை அமைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழர் பிரதேசங்களில் வழமையான நுழைவாசல் அமைப்பது போல் அல்லாது யாழ். மாவட்டத்தில் உள்ள புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தினரின் ஏற்பாட்டில் ஊரிற்கு நுழையும் பகுதியில் அமைக்கபட்டுள்ள நுழைவாசல் பற்றி அதன் வடிவமைப்பாளர் கட்டடக்கலைஞர் தமோதரம்பிள்ளை ஹரிகரன் நுழைவாசல் வடிவமைப்பின் எண்ணக்கரு பற்றி குறிப்பிடும் போது, 'கண்ணகி அம்மன் ஆலயத்தின் வரவேற்பு நுழைவாசல் ஏனைய இடங்களில் உள்ளது போன்ற தனியாக ஊருக்கான வாசலாக மட்டும் இருக்ককூடாது. அதேவேளை புங்குடுதீவு மக்களுக்கு மட்டுமன்றி அவ்வழியால் நயினாதீவுக்குப் பயணம் செய்கின்ற ஏனைய மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். பண்பாட்டையும் கலை உணர்வையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற பல இலக்குகளுடன் வடிவமைக்கப் பட்டதாகும் என்று தெரிவித்தார்.



கட்டடக் கலைஞர்
ஹரிகரன்

மேலும் நுழைவாசல் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் உள்ள வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறும் தெருமூடி மடம் என்ற பொதுநோக்கு மண்டபத்தையும், வீடுகளில் இளைப்பாறுவதற்கு பயன்படும் திண்ணைகளையும் இணைத்து இந்த நுழைவாசல் அமைக்கப்பட்டுள்ளது.

நுழைவாசலின் புறத்தோற்றம் கண்ணகி வரலாற்றுடன் தொடர்புடைய பூம்புகார் பட்டினத்தில் உள்ள திராவிடக் கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டு சுமார் 47 அடி உயரமும் 95 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டாதாக 30 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இதன் இரண்டு பக்கங்களிலும் உள்ள மண்டபத்தில் 50 பேர் வரை இளைப்பாறும் வசதி உண்டு. நுழைவாசலுக்கான வர்ணம் வழமையான கட்டடங்களுக்கு பிரயோகிப்பது போல் இல்லாமல் கண்ணகியின் கோபத்தால் எழுந்த தீயை நினைவு கொள்ளும் வகையில் கருஞ்சிவப்பு வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நுழைவாசல் இரவிலும் கம்பீரமாக தெரியும் வகையில் பொருத்தமான வகையில் மின்சார விளக்குகளால் ஒளியூட்டப்பட்டுள்ளது.

இந்த நுழைவாசல் கண்ணகி அம்மனையும் புங்குடுதீவு என்ற இடத்தையும் உலக தமிழ் மக்களின் மனதில் நிறுத்தும் என்றும் குறிப்பிட்டார். அபிவிருத்திச் செயற்பாட்டின் முதலாவது பகுதி தற்போது நிறைவடைந்துள்ளது. தொடர்ந்து இரண்டாவது பகுதியாக வாகன தரிப்பிட வசதிகளுடன் சிற்றூண்டிச்சாலை, சிறிய கடைத்தொகுதிகள் மற்றும் பொதுக்கழிப்பிடம் என்பன அமையவுள்ளன.


இவ்வளவு காலமும் வயல் வெளியாக மட்டும் இருந்த இடம், கட்டடங்கள் மற்றும் மக்கள் பாவனையுடன் இணைந்து மக்களின் வாழ்வில் மறக்க முடியாத ஒரு இடமாக உருவாகும். வயதானவர்கள் தங்கள் கடந்த காலங்களை நினைவு கூறும்போது மரத்தடிகளையும் மதகுகளையும் இணைத்து கதை சொல்லும் காலம் முடிந்து, இனி வரும் காலங்களில் நுழைவாசல்களை இணைத்து கதை சொல்லும் காலம் உருவாகும்.




விஜய் - அட்லீ கூட்டணியில் மூன்றாவதாக உருவாகும் படத்திற்கு பிகில் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

விஜயின் பிறந்தநாளன்று படத்தின் முதல்பார்வை வெளியானது. இந்தப் படங்கள்தான் இப்போது சமூவலைதளங்களை அதிர வைத்துக் கொண்டுள்ளன.

உதைபந்தாட்டத்தை மையமாகக் கொண்ட இந்தக் கதையில் அப்பா, மகன் என இரு வேடங்களில் விஜய் நடிக்கிறாராம். சரி... அது என்ன பிகில், விசில் என்பதைத்தான் சென்னைத் தமிழில் மாற்றியிருக்கிறார்களாம்.



சிவகார்த்திகேயன் - பாண்டிராஜ் கூட்டணியில் உருவாகும் படத்திற்கு எம்.ஜி.ஆரின் படப் பெயரான 'எங்க வீட்டுப் பிள்ளை" எனப் பெயர் வைக்கவுள்ளனர். அனுமதிக்காக இப்போது பேச்சு நடக்கிறது.

குடும்பக் கதையை மையமாகக் கொண்ட இந்தப் படத்தில் அனு இமானுவல், ஐஸ்வர்யா ராஜேஸ், சூரி எனப் பல பிரபலங்கள் நடிக்கிறார்கள்.



'தோனி' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர், ராதிகா ஆப்தே. தற்போது, ஹொலிவுட் படம் ஒன்றில் நடித்துக்கொண்டிருக்கும் அவர், "இன்றுவரை நான் வெற்றிபெற்ற நாயகியாக உணரவில்லை. என் மனதுக்குள் நினைத்திருக்கும் சாதனையை இன்னும் நான் செய்யவில்லை. அது நடக்கும்போதுதான் நான் வெற்றி பெற்றதாக உணர்வேன்'' என்று கூறியிருக்கிறார்.

சமந்தாவின் ஓ பேபி படம் ஜூலையில் வெளியாகிறது. இந்தப் படத்திற்காக சமந்தா அதிக கவனம் செலுத்தியுள்ளாராம்.

தனது முதிய பாத்திரத்திற்காக பழம்பெரும் நடிகை லட்சுமியிடம் சென்று அவரிடம் நடிப்புப் பழகியவர், அவருக்காக சின்மயி குரல் கொடுக்கும்போது அருகிலிருந்து அந்தக் காட்சிகளை விளக்கியுள்ளாராம்.



அருண்ராஜா காமராஜா இயக்கிய 'கனா' திரைப்படம், தெலுங்கில் 'கௌசல்யா கிருஷ்ணமூர்த்தி' என மீளுருவாக்கப்பட்டுள்ளது.

தமிழில் நடித்த ஐஸ்வர்யா ராஜேஷ்தான் இதிலும் நாயகி. படத்தின் தெலுங்கு டீசரைப் பார்த்த நடிகர் சிரஞ்சீவி, ஐஸ்வர்யா ராஜேஷுக்கு தொலைபேசியில் வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.






பொலிவுட் படத்தில் நடிப்பதற்காக உடல் எடையை வெகுவாகக் குறைத்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். மெல்லிய தோற்றத்தில் இருக்கும் அவரின் புகைப்படங்கள் சமூகவலைதளங்களில் வெளியானது.

நடிகை ஸ்ரீரெட்டி, 'கீர்த்தி சுரேஷின் இந்தப் புகைப்படங்களைப் பார்க்கும் போது, அவரது தோற்றம் நோயாளியைப் போல இருக்கிறது' எனருவிற்றரில் தெரிவித்திருக்கிறார். இதற்கு ரசிகர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# நிலை தடுமாறும் சர்வதேசம்!

# நிலைமாறு கால நீதியின் நிலை?



மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டால் இலங்கையில் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். இனப்பிரச்சினைக்கும் தீர்வைக் காணலாம் என்ற நம்பிக்கைளை மக்கள் மத்தியில் விதைத்தே 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 திகதி ஆட்சி மாற்றம் என்ற பெயரில் மைத்திரி- ரணில் அரசாங்கம் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும், இந்தியா போன்ற நாடுகளும் இணைந்து தமக்கு இசைவான ஆட்சியாளர்கள் என்று நம்பியே நல்லாட்சி என்று கூறி மைத்திரி- ரணில் கூட்டு உருவாக்கப்பட்டது. மாற்றம் என்ற சூடு காய்வதற்கு முன்னர், இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பில் 2014 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிய 18 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த ஜனாதிபதிக்குரிய சர்வாதிகார தன்மைகள், 2016 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டன.

அதாவது இலங்கை ஒற்றையாட்சியின் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் பலவற்றை இலங்கை நாடாளுமன்றத்திற்கு பரவலாக்கம் செய்வதற்குரிய 19 ஆவது திருத்தச் சட்டம் 2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னரான சூழலில் மைத்திரி- ரணில் ஆகிய இருவரிடையேயும் ஆரம்பித்த அதிகார மோதல், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்கும் நிலையை மைத்திரிக்குத் தூண்டியது. இதனால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி 51 நாட்கள் வரை நீடித்தது. பின்னர் பலத்த கண்டனங்கள், இழுபறிகளுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க டிசம்பர் மாதம் நான்காம் திகதி மைத்திரியால் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஆனாலும் இன்று வரை அதிகாரமோதல் இருவரிடையேயும் நீடிக்கிறது. இவ்வாறானதொரு நிலையில் இலங்கை அரசியலமைப்பின் 18 ஆவது 19 ஆவது திருத்தச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமென மைத்திரிபால சிறிசேன கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறினார். 19 ஆவது திருத்தச் சட்டமே அரசியல் பிரச்சினைகளுக்குக் காரணம் எனவும் மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இடித்துரைத்தார்.

அரசியலமைப்புத் திருத்தங்களே இலங்கையில் குழப்பங்கள் ஏற்படக் காரணம் என்றும் மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்துகின்றார். 19 வது திருத்த சட்டத்தின் ஊடாக இலங்கையில் தலைவர்கள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் மைத்திரி விபரித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டால் இலங்கையில் புதிய அரசியல் மாற்றம் ஏற்படுமென கொழும்பில் செயற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் அப்போது மார்தட்டியிருந்தன. போரின் பின்னரான நிலைமாறுகால நீதியை நிலை நாட்டிவிடலாமெனவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தன.

கொழும்பில் உள்ள அமெரிக்கா, இந்திய உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து, நம்பிக்கையூட்டியிருந்தனர். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியில் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பதவி வகித்த ஒருவரை, அதுவும் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் நடந்தபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரை, மஹிந்தவிடம் இருந்து பிரித்து ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியுடன் கூட்டுச் சேர்த்து ஜனாதிபதியாக்கினால், மாற்றம் ஏற்படுமா என்று ஈழத் தமிழர்கள் அப்போதே சந்தேகம் எழுப்பியிருந்தனர்

அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற கட்சி என்று கூறும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சம்பந்தன், வெளிநாட்டுத் தூதுவர்களின் பேச்சை நம்பி, மைத்திரிபால சிறிசேனவை நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிட்டும் பேசியிருந்தார். விரும்பியோ விரும்பாமலோ அப்போது பாதிக்கப்பட்டிருந்த வடக்கு- கிழக்கு தாயக மக்களில் அனேகமானோர் அமெரிக்க, இந்தியத் தூதுவர்களின் கதைகளை நம்பி மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்திருந்தனர்.

இரண்டு இலட்சம் மேலதிக வாக்குகளினால் மைத்திரிபால சிறிசேன 2015 ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அதாவது அந்த மேலதிக வாக்குகள் தமிழ்- முஸ்லிம் மக்களுடையதென ரணில் விக்கிரமசிங்கவே அப்போது கூறியிருந்தார். தமிழ்- முஸ்லிம் மக்கள் எதிராக வாக்களித்ததாலேயே தோல்வியடைந்ததாக மஹிந்த ராஜபக்ஷவும் அன்று கூறியிருந்தார். தனக்கு பெரும்பான்மையாக வாக்களித்த பௌத்த - சிங்கள மக்களுக்கு நன்றியும் தெரிவித்திருந்தார் மஹிந்த.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மகிந்த பிரதமராகத் திடீரென பதவியேற்றபோது, இலங்கை அரசியல் தலைகீழாக மாறிவிட்டதாகத் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரரா, கூறியிருந்தார். ஆனாலும், ஈழப்போரை இல்லாதொழிக்க அனைத்து வழிகளிலும் இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்துக்கு உதவியளித்த அமெரிக்கா போன்ற மேற்குலகமும், இந்தியா போன்ற நாடுகளும் இதுவரை உரிய பதிலளிக்கவில்லை.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் பின்னரான நிலையில் கூட இந்த நாடுகள், 2015 ஆம் ஆண்டு இலங்கையில் தாம் எடுத்த முயற்சி தோல்வியடைந்ததாக இதுவரை ஒப்புக்கொள்ளவுமில்லை. சிங்கள ஆட்சியாளர்களைக் கண்டிக்கவுமில்லை. மாறாக 2015 ஆம் ஜனவரி மாதம் ஆட்சியில் இருந்து கவிழ்த்து விழுத்திய மஹிந்த ராஜபக்ஷவுடன், தற்போது உறவைப் பேணி வருகின்றனர். குறிப்பாக இலங்கையுடன் செய்யப்படவுள்ள சோபா எனப்படும் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக இந்த ஆண்டு இரண்டு தடவைகள்மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலெய்னா சந்தித்தார்.

இந்த மாதம் கொழும்புக்கு வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்திருந்தார். கொழும்புக்கு வந்து சென்ற ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் அனைவருமே மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கின்றனர். ஆகவே மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து மைத்திரிபால சிறிசேனவைப் பிரித்து 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக்கி மாற்றம் என்று இவர்கள் அப்போது கூறிய கதைக்கு தற்போது என்ன நடந்தது? கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர், கொழும்புக்கு வந்து சென்ற அத்தனை வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துச் சென்றதன் பின்னணிதான் என்ன?

மாற்றம் என்ற கதையை நம்பி 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில். இவர்கள் அறிமுகப்படுத்திய மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த மக்களின் நிலை என்ன? குறிப்பாக மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக வாக்களித்த தமிழ் மக்களின் தற்போதைய நிலை என்ன? தாங்கள் நினைத்த மாற்றம் ஏற்படவில்லை என்பதால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னரான சூழலில் மகிந்த ராஜபக்சவுடன் உறவைப் புதுப்பித்துக் கொண்டது போன்று, தமிழ் மக்களும் மீண்டும் உறவைப் புதுப்பிக்க வேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கின்றனரா என்ற கேள்விகள் மக்களிடம் எழாமலில்லை.

இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்தின் அரசியல் யாப்புக்களும் அதன் சட்டங்களும் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான தடைக் கற்கல் என்று, கடந்த எழுபது ஆண்டுகளாக கூறப்பட்டே வருகின்றன. அதற்கான ஆயுதப் போராட்டத்தை அழிக்க சிங்கள ஆட்சியாளர்களுக்கு உதவி செய்து அதன் பின்னரான அரசியல் சூழலிலும் அந்தச் சிங்கள ஆட்சியாளர்களைத் தாங்கள் நம்புவது போன்று தமிழர்களும் நம்ப வேண்டும் என்ற செய்தியைத்தான் சர்வதேசம் சொல்கின்றது.

மாற்றம் என்று கூறி உருவாக்கிய 19 ஆவது திருத்தச் சட்டத்தையே மைத்திரிபால சிறிசேன தற்போது தவறு என்கிறார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்குத் தமிழர்களை ஒடுக்க முஸ்லிம்கள் எடுக்கும் ஆயுதம்!

**காந்தரூபன்**

தமிழர் வரலாற்றுத் தொன்மை புதைந்து கிடக்கும் கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழன் இருப்பைத் தக்க வைக்கப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. திருகோணமலை தொடக்கம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் தமிழரின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

ஆட்சி அதிகாரம் புரிந்த தமிழினம் அடங்கி, ஒடுங்கி வாழவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்னும் சில காலம்தான் இருக்கின்றது. எஞ்சியிருப்பதையும் சிங்களவரும் முஸ்லிம்களும் பிடுங்கி விடுவார்கள் என்ற நிலையே தற்போது கிழக்கில் ஏற்பட்டுள்ளது.

கிழக்கில் தற்போது பேசுபொருளாக உள்ளது கல்முனையும் கன்னியாவும். அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை உப தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக் கோரும் போராட்டங்கள் வலுப்பெற்றிருக்கின்றன. இதுவரை கிழக்கில் கல்முனைக்குள் மாத்திரம் அடங்கிப்போயிருந்த இப்போராட்டம் இன்று விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. தமிழர் தாயகம் மட்டுமன்றி இலங்கை முழுவதும் - சர்வதேச ரீதியாகவும் இது பேசுபொருள் ஆகியிருக்கின்றது. அதேபோன்றுதான் கன்னியாவும் அம்பாறை மாவட்டம் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஏனைய 19 பிரதேச செயலகங்களும் முழுமையான அதிகாரங்களுடன் இயங்குகின்ற போதிலும் கல்முனை உப தமிழ் பிரதேச செயலகம் மட்டும் காணி, நிதி விடயங்களைக் கையாளும் அதிகாரம் அற்ற குறை பிரதேச செயலகமாக இருக்கின்றது.


1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பிரதேச செயலகம் 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உடையது. 9798 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 346 பேர் வசிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் வசிக்கும் தமிழர்களின் தலைநகரமாக கல்முனை வடக்கு விளங்குகின்றது. இன ரீதியான கணக்கெடுப்பில், 33,007 தமிழர்களும் 3,215 முஸ்லிம்களும் 124 சிங்கள மக்களும் வசிக்கின்றனர். மத அடிப்படையில் நோக்கினால், 30,205 இந்துக்களும் 3215 இஸ்லாமியரும் 2802 கிறிஸ்தவர்களும் 124 பௌத்தர்களும் வசிக்கின்றனர்.

45 இந்து ஆலயங்கள், 12 கிறிஸ்தவ தேவாலயங்கள், 5 இஸ்லாம் பள்ளிவாசல்கள், 1பௌத்த விகாரை என்பன உள்ளன. இதைவிட கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, பிரபல முன்னணிப் பாடசாலைகள், பல அரச திணைக்களங்களும் என்பனவும் இயங்குகின்றன. தமிழர்களின் புராதன நகரமாக இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவு 15.77 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. 12.01.1989 ஆம் திகதி சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் என உருவாக்கப்பட்டது. 28.07.1993 ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உதவி அரசாங்க அதிபர் பிரிவு எனத் தரமுயர்த்தப்பட்டது.

இதன் பின்னர் 1993 பிற்பகுதியில், நாடளாவிய ரீதியில் இயங்கிய 28 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், கல்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய 27 உம் தரமுயர்த்தப்பட்டன. ஒரு பிரதேச செயலகமாக இயங்குவதற்கான அனைத்து அடிப்படைத் தகுதிகளையும் கொண்டிருக்கும் இப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளே தடையாக இருக்கின்றனர்.

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைகளான நற்பட்டிமுனை, சாய்ந்தமருது, இஸ்லாமாபாத் உள்ளிட்ட பிரதேசங்களை உள்ளடக்கி முஸ்லிம் பிரதேச செயலகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழ்ப் பிரதேச செயலகத்தை முழு அதிகாரத்துடன் இயக்குவதற்கு கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தடைபோடப்பட்டு வருகின்றது.



கிழக்கில் அதுவும் அம்பாறையில் தமிழ்ப் பிரதேச செயலகம் ஒன்று உருவாகக்கூடாது என்பதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றனர். இந்தப் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான கோரிக்கைகள் மேலெழும்பும் போதெல்லாம் அதைத் தடுத்து நிறுத்துவதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் குறியாக இருக்கின்றனர். இதற்குக் காரணம், கிழக்கில் தமிழர்களுக்கான கட்டமைப்பு ஒன்று உருவாகினால் தமிழர்கள் எழுச்சி பெற்றுவிடுவார்கள் என்பதாகும். மலையகத் தமிழர்களை சிங்களவர்கள் நசுக்குவதைப் போன்று கிழக்குத் தமிழர்களை - அதுவும் பூர்வீகமாக அங்கு வாழும் தமிழர்களை - வந்தேறு குடிகளான முஸ்லிம்கள் நசுக்கி வருகின்றனர்.

இதற்காகவே, கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதை முஸ்லிம்கள் எதிர்க்கின்றனர். பிரதேச செயலகமாகத் தரமுயர்ந்தால் அவர்களுக்கு காணி மற்றும் நிதி சார்ந்த விடயங்களைக் கையாளும் அதிகாரம் சென்றுவிடும். அதன் பின்னர் பல தரப்பினரின் உதவியுடன் தமிழர்கள் கல்முனையில் எழுச்சியடைந்துவிடுவர். இந்த எழுச்சியைத் தடுப்பதற்குத்தான் கல்முனை உப தமிழ்ப் பிரதேச செயலகத்திற்கு இதுவரை கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அம்பாறை மாவட்டச் செயலகத்தில் உள்ள கணக்காளர் ஒருவரே இங்கு பதில் கடமைக்காக அனுப்பப்படுகின்றார்.

கிழக்கில் அனைத்துத் துறைகளையும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருக்கவே முஸ்லிம்கள் விரும்புகின்றனர். கிழக்கு மாகாணம் தங்களுக்கு உரியது என அவர்கள் வாதிடுகின்றனர். அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்களின் எண்ணிக்கை தற்போது சிறுபான்மை ஆக மாற்றப்பட்டு வருகின்றது.

அம்பாறை, மட்டக்களப்பை போன்றே திருகோணமலையும் தமிழர் கையை மீறிச் சென்றுவிட்டது என திருக்கோணேஸ்வரர் ஆலய பக்தர் ப.பரமசிவம்பிள்ளை கவலை வெளியிட்டார். திருக்கோணேஸ்வரம் எதிர் காலத்தில் சிங்கள ஆதிக்கத்திற்குள் சென்றுவிடும் எனவும் அவர் தெரிவித்தார். கன்னியா வெந்நீரூற்று பிரதேசம் சிங்களவர்களால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு அங்கு ஒரு பக்கம் தமிழர்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். இதற்கு பௌத்த பிக்குகளும் (தமது நலன்களைக் கருத்தில் கொண்டு) ஆதரவளித்துள்ளனர். ஆனால், அதே கல்முனையில், குறித்த பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கூடாது என முஸ்லிம்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல கலந்து வாழ்ந்தவர்கள் என முன்னோரால் சொல்லப்பட்ட நம்பிக்கைகளை இன்று முஸ்லிம்களே சிதறடித்திருக்கின்றனர். அவர்கள் தனித் தாயகக் கனவில் மூழ்கியிருக்கின்றனர். கிழக்கை முஸ்லிம் தாயகமாக அறிவிக்கும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான களச்சூழல்களின் பின்னணியில், தமிழர் நில ஆக்கிரமிப்பு, தமிழர் இருப்பு கேள்விக்குறியாகுதல், தமிழர்கள் நசுக்கப்படுதல் போன்ற விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் என்ன என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. கிழக்கில் முஸ்லிம் எழுச்சிக்காக முஸ்லிம் அரசியல்வாதிகள் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வருகின்ற நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய் மூடி மௌனியாக இருக்கின்றது.

இதற்கான விளைவை கடந்த வெள்ளிக்கிழமை (21) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுபவித்திருக்கின்றது.

கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது கூட்டமைப்பால் முடியாத காரியம் அல்ல. ஆட்சிக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நினைத்தால் இது சாத்தியமாகாதது என்றில்லை. எனினும், அவர்கள் சிங்களத் தரப்போடும் முஸ்லிம் தரப்போடும் இணக்க அரசியலைக் கடைப்பிடிக்கவே விரும்புகின்றனர்.

கல்முனை விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்திய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மூன்று மாத கால அவகாசத்துடன் திரும்பி வந்தனர். அந்த அவகாசச் செய்தியை உண்ணாவிரதம் இருக்கும் மக்களுக்கு தெரிவிப்பதற்காக அங்கு சென்ற கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அங்கு மக்களிடம் முறையாக வாங்கிக் கட்டியிருக்கின்றார்.

கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள் எனத் தமிழீழ தேசியத் தலைவர் கூறியதற்கு அர்த்தம் கொடுக்கவேண்டும். எமது தாயகத்தில் உள்ள ஒரு சிறு நிலத்தைக் கூட நாம் இழப்போமாக இருந்தால் எமக்காகச் சாவை அணைத்தவர்களின் கனவுகள் மெய்ப்படாது. எனவே, எமக்காக மரணித்த, எமக்காகத் தியாகங்களைப் புரிந்த, எமக்காக தங்களை அர்ப்பணித்த புனிதமானவர்களின் மனதில் இருந்தி எமது நிலம் மீட்புக்கான பணிகளைத் தீவிரப்படுத்துவோம். இது அனைவரதும் கடமை.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 84

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

திங்கட்கிழமை காலை வன்னேரிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் தாலிகட்டு இடம்பெற்றது. பட்டு வேட்டி, கூறைச்சேலை எடுக்க முடியாவிட்டாலும் புதுஆடைகளில் மணமக்கள் அழகாகத்தான் இருந்தனர்.

அதுநாள் வரை பார்வதி முத்தம்மா மருமகளாக வருவதை விரும்பாதபோதிலும் தம்பதிகள் அவர்களிடம் காலில் விழுந்து ஆசி பெற்றபோது அவள், மருமகளைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள். அருகில் நின்ற பெருமாளுக்கும் வேலாயிக்கும் கண்கள் கலங்கின. அவர்களிடமும் தம்பதிகள் ஆசி பெற்றனர்.

முருகேசர் அருகில் வந்து சுந்தரத்தின் தலையை வருடிவிட்டு, “டேய் வாற மாதம் பொடியனைக் கொஞ்சம் கூடக் காசு கேட்டு, உனக்கு மாப்பிளை மோதிரம் செய்து தாறன்”, என்றார்.

அந்த வார்த்தைகள் முத்தம்மாவின் நெஞ்சில முள்ளாகக் குத்தின. வாற மாதம் முருகேசர் செய்து தரும் மோதிரத்தை வாங்க சுந்தரம் அவர்களுடன் இருக்கப்போவதில்லை என்பதே அவள் மனதை ஒருமுறை குலுங்கவைத்தது. அனைவரும் கோவிலைச் சுற்றிக் கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு புறப்பட்டனர்.

அன்று நண்பகல் கலியாண விருந்து தடல்புடலாக நடந்தது. நல்லையாவின் இரு மனைவியரும் பிள்ளைகளும் அயல் வீடுகள், செல்லத்துரை குடும்பம் என விருந்து சற்றுப் பெரிதாகவே அமைந்து விட்டது. ஒரு இடையில் முருகரப்பும் நல்லையாவும் போய் கள்ளடித்து விட்டு வந்துவிட்டனர். அவர்கள் இருவருமே உசாராய் நின்று பந்தி பரிமாறினர்.

அவர்கள் குழம்பெங்கை, பருப்பெங்கை, தயிரைக் கொண்டு வா எனப் போட்ட அட்டகாசத்தில் விருந்து கலகலப்பாக நடந்தேறியது.

விருந்து நிறைவடையும் சந்தர்ப்பத்தில் வீட்டுக் கடப்படியில் வந்துநின்ற மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கிய சிவமும், இன்னுமொரு போராளியும் உள்ளே வந்தனர்.

பார்வதியின் நெஞ்சில் சிவம் வரவில்லை என்பது ஒரு பெருங்குறைபாடாகவே கிடந்து வாட்டிக்கொண்டிருந்தது.

விருந்துச் சாப்பாடுகூட வயிற்றில் சரியாக இறங்க மறுத்தது. சாப்பிட்டுவிட்டு கைகழுவிக் கொண்டிருந்த பார்வதி செம்பை அப்பிடியே வாளியில் போட்டுவிட்டு ஓடிப்போய் சிவத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள்.

அவளால் அழுகையை அடக்கமுடியவில்லை. பரமசிவம் அருகில் வந்து “சரி.. சரி... அவனைக் கூட்டிக்கொண்டுபோய் சாப்பாட்டைக் குடு”, என்றுவிட்டு “தம்பி பின்னாலை வாளியிலை தண்ணி கிடக்குது. இரண்டு பேரும் போய் கால்முகத்தைக் கழுவிப்போட்டு வாங்கோ”, எனக் கூறினார்.



சுந்தரமும், முத்தம்மாவும் தங்கள் கூடாரத்தை விட்டு வெளியே வந்தனர். சுந்தரம், “அண்ணா!”, என வாஞ்சையுடன் ஓடிப்போய் அவனின் கையைப் பற்றிக் கொண்டான். பின்னால் முத்தம்மாவும் வந்து நின்றாள். ஏனோ சிவம் அவளைப் பார்த்தபோது நாணத்துடன் தலையைக் குனிந்துகொண்டாள். அரைப்பாவாடை சட்டையுடன் பார்த்த முத்தம்மாவை சேலை, தாலி, பொட்டுடன் பார்த்த சிவத்துக்கு வியப்பாயிருந்தது.

சிவம், “ம்... முத்து பெரிய பொம்பிளையாகிட்டாள்”, என்றான்.

முத்தம்மா தயக்கத்துடன், “சாப்பிடுங்கோ சிவமண்ணா, பிறகு கதைப்பம்”, என்றாள்.

சிவம் சிரித்தவாறே, “சிவமண்ணா இல்ல... இனி சிவம் மச்சான்”, என்று விட்டு பின்னால் போனான்.

ஏற்கனவே கள்ளில் உற்சாகமடைந்திருந்த முருகருக்கு சிவத்தைக் கண்டதும், அது பலமாகப் பெருகிவிட்டது.

அவர், “பரமசிவம் பாத்தியே எங்கடை பொடியனை... இவங்கள் இருக்கேக்கை ஆமிக்காரன் இஞ்சாலை வர ஏலுமே? ஆமியை ஓட ஓடக் கலைச்சுப் போட்டு எங்கட ஊருக்குப் போறமோ இல்லையோ பார்”, என்றுவிட்டு கடகடவெனச் சிரித்தார் அவர்.

புரியாணி, ப்ரைட் ரைஸ் போன்ற ஆடம்பர உணவு வகைகளை விட பந்திச் சாப்பாட்டில் ஒரு தனியான ருசி இருப்பதாகவே சிவத்துக்கு தோன்றியது. அதிலும் தயிர் விட்டுப் பிசைந்து சாப்பிட்டு முடித்த பின்பு அதே இலையில் பாயாசத்தை விட்டுக் கையால் வாரிக் குடிக்கும்போது ஒரு தனியான இன்பம் இருப்பதை உணர்ந்தான். அதிலும் தாய் அருகில் அமர்ந்து, “இதை விடட்டே, அதை விடட்டே, கொஞ்சம், இன்னும் ஒரு சொட்டுப் போடுறன்”, என ஊட்டி ஊட்டி உபசரிக்கும்போது அதன் சுவை பன்மடங்காகிவிட்டது. வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு, செம்பிலுள்ள தண்ணீரைக் குடித்து முடித்தபோது ஒரு நீண்ட ஏவறை வெளியே வந்தது.

அவனும் கூட வந்த போராளியும் இலைகளைக் கொண்டுபோய் எறிந்துவிட்டு கைகளைக் கழுவிக்கொண்டனர். அவர்கள் போய் ஓர் இடத்தில் அமர்ந்ததும் பரமசிவம், பார்வதி உட்பட அங்கிருந்த அனைவரும் அவர்களைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். எல்லோரும் மாறி மாறிப் புதினம் கேட்கத் தொடங்கிவிட்டனர். சிவமும் சலிப்பின்றி சொல்லக்கூடிய விஷயங்களை எல்லாம் சொன்னான். தாங்கள் பெற்ற வெற்றிகளையும், படையினரின் இழப்புக்களையும் அவன் சொன்னானேயொழிய தங்கள் தோல்விகள், வீரச்சாவுகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

பார்வதிக்கு அவை பற்றிய அக்கறை எதுவும் இருக்கவில்லை. அவள் அவனிடம், “மூண்டு நேரமும் வடிவாய்ச் சாப்பாடு தருவாங்களே?” எனக் கேட்டாள்.

“அது ஒருநாளும் குறையாதணை”, என்றான் அவன்.

அவள் விடவில்லை, “அப்ப சண்டை நேரம் என்ன செய்வியள்?”,

அவன் மெல்லிய ஒரு சிரிப்புடன், “அங்கையும் கொண்டு வருவினம். அதுக்கெண்டு பிறம்பாய் ஆக்கள் இருக்கினம்”, என்றான்.

“தம்பி கண்டபடி நித்திரை முழியாதை! வருத்தம்கிருத்தம் வரப் பாக்கும்”, என்றாள் பார்வதி கவலையுடன்.

“பண்டிக் காவல் பாத்துப் பழகின எனக்கு நித்திரை முழிப்பாலை வருத்தம் வராதணை”, என்றான் சிவம்.

மேலும் சற்றுநேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு, “நீங்கள் இவன் தம்பியோடை கதையுங்கோ.. நான் சுந்தரத்தோட கொஞ்சநேரம் கதைச்சிட்டு வாறன்”, என்றுவிட்டு எழுந்தான்.

அங்கு அமர்ந்திருந்த சுந்தரத்தை, “வா... உன்ரை கூடாரத்திலை போயிருந்து கதைப்பம்”, என்றுவிட்டு முன்னால் நடந்தான்.

சிவத்தைக் கண்டதும் முத்தம்மா கூடாரத்தை விட்டு வெளியே வந்தாள். “உள்ளை... வா கதைப்பம்”, என்றுவிட்டுக் கூடாரத்துக்குள் புகுந்தான் சிவம்.

முத்தம்மா விரித்துவிட்ட பாயில் மூவரும் அமர்ந்து கொண்டனர். சிவம் கதைக்க ஆரம்பித்தான்.

“நீங்கள் இரண்டுபேரும் கலியாணம் செய்தது எனக்குப் பெரிய சந்தோஷம். இனி நான் அம்மா, ஐயா பற்றி எந்தக் கவலையுமில்லாமல் சண்டையில நிப்பன்”

“என்னண்ணா சொல்லுறாய்?”, என இடைமறித்தான் சுந்தரம்.

“சுந்தரம் அம்மா, ஐயாவுக்கும் வயது போட்டுது. பெருமாளும் வருத்தக்காரன், வேலாயியும் இன்னும் எவ்வளவு காலம் உழைக்க முடியும். இப்ப நீயும் முத்தியும் சேர்ந்ததால நீங்கள் இரண்டு பேரும் இரண்டு குடும்பங்களையும் கவனமாய்ப் பாப்பியள்”.

“அண்ணா...”, என சுந்தரம் ஏதோ சொல்ல முயல சிவம் இடைமறித்து, “நீ வடிவாய்ப் பாப்பாய் அதிலை சந்தேகம் இல்லை... சிலவேளை கெதியிலை நாங்கள் ஊருக்குத் திரும்பலாம். இல்லாட்டில் விமானக் குண்டுகளையும், எறிகணையளையும் தாண்டி மேலும் மேலும் இடம்பெயர வேண்டியும் வரலாம்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# பேய்களின் இராச்சியம்


வன்முறைகளும் அட்டூழியங்களும் பெருமளவு அதிகரித்து விட்ட நிலையில், கொலம்பியாவின் பிஷப் ஆண்டகை, இந்த நகர் முழுவதும் புனித ஆசிநீரை விசிறியடிக்க முடிவெடுத்துள்ளார்.

கத்தோலிக்க மகுருக்களில் சிலர் பேயோட்டுவதுண்டு. இந்த நிகழ்வின் போது, இவர்கள் 'பேய் பிடித்தவர்" மீது ஆசிநீர் எனப்படும் புனித நீரை தெளிக்க, சம்பந்தப்பட்டவர் துடிதுடிப்பது வழமை. நகரெங்கும் ஆசிநீரை, உலங்கு வானூர்தி மூலம் விசிறியடிக்க, இராணுவத்தின் உதவியை பிஷப் கோரியுள்ளார். இந்த வருடம் ஜனவரிக்கும் மே மாதத்திற்கும் இடையில் வன்முறைகளின் உச்சமாக 51 கொலைகள் விழுந்துள்ளன. அடுத்த மாதம் 13, 14ஆம் திகதிகளில் இந்தப் "பேயோட்டும் சடங்கு " இடம்பெறப் போகின்றது.

மிகப் பிந்திய கொடூரமாக ஒரு பத்து வயதுச் சிறுமி பாலியல் ரீதியாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டாள். நாட்டையே அதிர வைத்த இந்தக் கொடூர கொலையின் சூத்திரதாரி சிறுமியின் மாமா. அமெரிக்காவிற்கு போதைவஸ்து கடத்தும் முக்கிய மையமாகவும் இந்த நகரம் திகழ்வதால், ஆயுதாரிகள் இடையே மோதல்களுக்கும் இங்கே குறைவில்லை என்கிறார்கள்.

துன்பங்களில் இருந்து மக்கள் இரட்சிக்கப்படட்டும்...!


# பெருங்கடலில் 80 மணி நேரம்



உண்ண உணவு இல்லை. குடிக்க நீர் இல்லை. சுட்டெரிக்கும் வெயிலில் ஒளிந்து தப்ப இடமே இல்லை. சின்னஞ்சிறிய உயிர்காப்புப் படகில் தனி ஒருவரால் 4 இரவு - பகலைக் கடக்க முடியுமா? அப்படித் தப்பித்த 60 வயது மனிதரின் கதைதான் இது...!

இவர் சிங்கப்பூர் நாட்டவர். தொழிலால் சுழியோடுபவர். மலேசியாவின் கிழக்குப் பிராந்திய கடற் பரப்பில் தனது படகில் சென்றவரை, திடீரென அடித்த பலத்த காற்று தாக்கியுள்ளது. பயணித்த படகு கவிழ்ந்து அமிழ்ந்து போக, கடவுச்சீட்டு இருந்த கைப் பையையும், ஆபத்துதவிப் படகையும் எடுத்துக்கொண்டார் லோ என்ற பெயர் கொண்ட இந்த மனிதர்.

தன் நண்பர்களுக்கு இவர் தகவல் அனுப்பியிருந்தாலும், மோசமான காலநிலை காரணமாக எந்த உதவியும் கிடைக்கவில்லை. தனது பார்வைக் கண்ணாடிகளை இழந்து விட்டதால், வானத்து நிறங்களைக் கூட தன்னால் வேறுபடுத்திப் பார்க்கமுடியவில்லை என்று கூறியிருக்கிறார். நான்காம் நாள் மாலை, 80 மணி நேரம் கழித்து அந்த வழியாக வந்த ஒரு கப்பல்தான் இவரை உயிரோடு மீட்டது.




# அர்த்த ராத்திரியில் உதைபந்தாட்டம்...!

நேரம் பெறுமதிமிக்கது என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் நோர்வே நாட்டின் இந்தத் தீவில் உள்ளவர்களுக்கோ நேரம் பார்ப்பது என்பது பெரும் இடையூறாகவே மாறியிருக்கின்றது. நேரம் நமக்கு வேண்டாம். எந்த நேரத்தில் எதையும் செய்ய எங்களை அனுமதியுங்கள் என்று அதிகாரிகளைக் கோரியுள்ளார்கள் இவர்கள்.

இத் தீவில் மொத்தம் 300 பேர் தான் வசிக்கிறார்கள். இதன் பெயர் Sommaroy. இங்கே மாரி காலத்தில் சூரியன் உதிப்பதில்லை. கோடையில் சூரியன் அஸ்தமிப்பதும் இல்லை. மே 18 இற்கும் ஜூலை 26 இற்கும் இடைப்பட்ட காலத்தில்- அதாவது மொத்தம் 60 நாட்கள் சூரிய அஸ்தமனமே இல்லை. இரவு - பகல் இல்லை என்பதால் தான் இவர்கள் நேரத்தை நாம் கடைப் பிடிக்க முடியாது என்கிறார்கள்.

பிரதான நகரிலிருந்து இத் தீவுக்குள் நுழையும் முன்னர் எதிர்ப்படும் பாலத்தருகே சுவர்க் கடிகாரங்களும், கைக் கடிகாரங்களும் அநாதரவாகப் போடப்பட்டுள்ளன. நேரத்தை கடைப்பிடிக்காத பிரதேசம் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றன இந்த "அநாதைக் கடிகாரங்கள்". நமக்கு நடுச்சாமமாக இருக்கும் பொழுதுகளில், இங்குள்ள பிள்ளைகள் பந்து விளையாடுவதைக் காணலாம். மக்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்கள். முற்றத்து புல்லை இயந்திரம் கொண்டு அறுத்துக் கொண்டிருப்பார் இன்னொருவர். அவர்களுக்கு இது பகல்தான்.

இவர்களைப் பின்பற்றி வடக்கிலுள்ள Finnmark, Nordland நகரவாசிகளும் எமக்கும் நேரம் வேண்டாம் என்று குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள். அனுமதி கிடைத்தால், கடிகாரத்திற்கு வேலை வைக்காத உலகத்தின் பிராந்தியம் இதுவாகவே இருக்கும்.



# மின்சாரத்தை விழுங்கு கட்டடங்கள்

நியூயோர்க் நகரம் என்றால் வானுயர்ந்த கட்டடங்கள்தான் கண்முன்னே வரும். இந்தக் கட்டடங்க தினசரி பெருமளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. செலவாகும் மின்சக்தியை முடிந்த அளவு சேரிக்கும் திட்டத்தை இந்த வானளாவிய கட்டடங்கள் கொண்ட நகரில் ஆரம்பித்துள்ளார்கள். இன்றைய நாட்களில் எழுப்பப்படும் வானுயர்ந்த கட்டடங்களில், முடிந்த அள சிக்கனமாகவே மின்சாரம் உபகோகிக்கப்பட்டு வருகின்ற லண்டனின் ஷார்ட் மாடிக் கட்டடம், ஷங்காய் மாடிக் கட்டடம் போன்றன இதற்கு நல்ல உதாரணங்கள். ஒரு தசாப்த கலத்திற்கு முன்பு எழுப்பப்பட்ட இந்த உயர்ந்த மாடிக் கட்டடங்களில், மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்துவது என்பது பெரும் சவாலாகவே இருக்கப் போகின்றது என்று சொல்கிறார்கள். (ஜனாதிபதி டிரம்பிற்கு சொந்தமான ஒரு 58 மாடிக் கட்டடம் 1984இல் கட்டப்பட்டது.)25,000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணம் கொண்ட கட்டடங்களிலிருந்து வெளியேறும் வாயுவின் அளவை 2030அளவில் 40 வீதத்தால் குறைக்க வேண்டுமென அதிகாரிகள் காலக்கெடு விதித்துள்ளார்கள். இதை இங்குள்ள 50,000 வரையிலான கட்டடங்கள் செய்வதென்பது சுலபமான ஒன்றல்ல......சவாலே சமாளி..

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## உதை ஒருக்காக் கூட்டமைப்பிட்டையும் சொல்ல வேணும் போத்துக் கொண்டு போகச் சொல்லி!

தொண்டைவரை வைச்சிருந்ததை இப்ப சீஎம் வெளியாலை கக்கிப் போட்டார். அரசுக்கு மாமா வேலை பாக்கும் கூட்டமைப்பு எண்டு சொல்லிப் போட்டார். என்ன அநியாயம் இது. எல்லாம் முடிஞ்சு இப்ப கூட்டமைப்பு மாமா வேலையே பாக்குது? அப்ப அதிலை உள்ள எல்லாரும் மாமாமார்தானே?

என்ன கோபம் இருந்தாலும் சீஎம் மாமாமார் எண்டு உவையளைச் சொல்லி இருக்கப்படாது. ஆனால் அதைவிடக் கேவலமாச் சொல்ல வேறை ஒண்டும் இல்லாத படியாலைதான் அவர் உப்பிடிச் சொன்னவர் எண்டும் சனம் கதைச்சது.

நான் சீஎம் சீஎம் எண்டு கதைக்க அதைப் பாத்துக் கொண்டிருந்த ஒருதன் சொன்னான் "அண்ணை சீஎம் எண்டு விக்கியரைச் சொல்லாதையுங்கோ. அவர் இப்ப சீஎம் இல்லை. அவரை இப்ப முன்னாள் சீஎம் எண்டு தான் பேப்பர்காரர் எழுதினம்." எண்டு. அதுக்கு நான் என்ன சொன்னான் தெரியுமே? எட என்னைப் பொறுத்தவரை அடுத்த சீஎம்மைத் தெரிவு செய்யிற வரைக்கும் அவர் தான் வடக்கின்ரை சீஎம். அதை ஒருத்தரும் மாத்தேலாது எண்டு.

அந்தாளை சனத்துக்கு ஒண்டும் செய்யாமல் வீட்டுக்குப் போயிட்டார் எண்டு கூட்டமைப்புக்காரர் நக்கலடிக்கிறவை. இப்ப பாக்கப் போனால் அந்தாள் சனத்துக்கு ஒண்டும் செய்யாட்டிலும் மாமா வேலை பாக்காமல் தமிழ் சனத்தின்ரை மரியாதையைக் காப்பாத்திப்போட்டுப் போட்டார் எல்லே.. அந்தாள் நினைச்சிருந்தால் உவையளைவிடப் பெரிய அளவிலை மாமா வேலை பாத்திருக்கலாம். அவர் ஒரு ஜென்ரில்மென் எண்டதாலை நல்ல பிள்ளையா இருந்திட்டுப் போட்டார்.

சீஎம்முக்கு ஆகலும் ஏறினது எதுக்கெண்டு தெரியுமே? கல்முனையிலை உள்ள உப பிரதேசச் செயலகத்தைத் தர உயத்தித் தரச் சொல்லிக் கொஞ்சப் பேர் உண்ணாவிரதம் இருக்கினம். தரம் உயத்திறதெண்டது ஒரு நல்ல விசியந்தானே? சனம் எவ்வளவு நன்மை அடையும். ஆனால் அங்காலை கொஞ்ச நானாமார் இருந்து கொண்டு அவையளும் சத்தியாக்கிரகம் இருந்தவை சபையை தரம் உயத்தப்படாது.... எண்டு அடம் பிடிச்சபடி இருக்கினம். அப்ப அதை எல்லாம் அரசாங்கத்திட்டைப் போய் அதிலை உள்ள உண்மையை அவைக்கு எடுத்துச் சொல்லி தமிழ் சனத்துக்காகக் கதைக்க வேண்டியது ஆற்றை பொறுப்பு? தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை பொறுப்பெல்லே! இது அதை எல்லாம் விட்டிட்டு தங்கடை தங்கடை சுகத்தைப் பாக்கிற ஆக்களை சீஎம் சொன்ன மாதிரித்தான் சொல்ல வேணும்.

அவங்கள் சனத்தொகையிலை எங்கள் அளவும் இல்லை. இனி மேல் வந்திடுவங்கள். போலை கிடக்கு. அப்பிடித் தொகை குறைஞ்ச ஆக்களாக அவங்கள் இருந்து கொண்டு எங்கை போங்கோ..அங்கை அவங்கள் இல்லாட்டி என்ரை பேரை மாத்திக் கூப்பிடுங்கோ. இந்தியா விலை மலையாளி இல்லாத இடமுமில்லை. இலங்கையிலை நானாமார் இல்லாத இடமுமில்லை எண்டு தான் சொல்ல வேணும்.

நாங்கள் சண்டை பிராக்கிலை இருந்தம். அவங்கள் அந்த இடுக்கைப் பாவிச்சு உள்ளுக்கை வந்து செய்ய வேண்டியதெல்லாத்தையும் செய்து போட்டாங்கள். வேண்ட வேண்டியது எல்லாத்தையும் மலிவா வேண்டி மடக்கிப் போட்டாங்கள். சீ.எம் கூட்டமைப்பைச் சொன்ன மாதிரி அவங்களிலை பலரும் அரசுக்கு மாமா வேலை பாக்கிறவங்கள் தான் எண்டதையும் சனந்தான் கதைச்சவை.

சீஎம் சொல்லிப் போட்டார் எண்டதுக்காக இல்லை, பொதுப்படையாகச் சனத்தின்ரை கணக்குப்படி கூட்டமைப்பு தன்னைத்தானே சுய விமரிசனம் செய்து, சுமந்திரனுக்கும் பழைய கதையளை எல்லாம் சொல்லி, நல்ல பிள்ளையாத் தொழிலைச் செய்ய வேணும் எண்ட புத்திமதியைச் சம்பந்தன் ஐயாவும் அவருக்குச் சொல்லிக் குடுத்து ஒரு புதுவிதமாக் கூட்டமைப்பை வழி நடத்த வேணும். உங்கடை நன்மைக்காக இல்லாட்டிலும் சனத்தின்ரை சௌகரியத்துக் காகப் பலதையும் விட்டுக்குடுத்து நடக்கப் பழகிக் கொள்ள வேணும்.

சம்பந்தன் ஐயா போய் றெஸ்ட் எடுக்க வேணும். மாவையும் இனிக் காணும். தமிழ் சனத்துக்குச் செய்த சேவை. தாங்யூ வெறி மச். புது ஆக்களுக்கு வழி விட்டிட்டு கொஞ்சம் ஒதுங்கினால் நல்லது.

உதைச் சொல்லேக்கைதான் ஒரு பகிடிக் கதை ஞாபகத்துக்கு வருகிது. இந்தியாவிலை போன எலக்சன் நேரத்திலை நடந்தது. ஒரு தொகுதி எம்.எல்.ஏ போன முறைக்கு முந்தின முறை கேட்டு வெண்டாப்பிறகு அவற்றை தொகுதிப் பக்கம் போனதும் இல்லையாம். சனத்தின்ரை குறை நிறையை கேட்டதும் இல்லையாம். சனத்துக்கு ஒண்டையும் செய்யேல்லையாம். போன எலக்சனுக்கு வாக்குக் கேட்டுச் சனத்திட்டை அவர் போனாப்போலை சனம் விளக்குமாறை எடுத்து அவருக்குச் சாத் தெண்டால்... சொல்லி வேலை இல்லை எண்டு சனம் கதைச்சவை. உந்தக் கதையை ஒருக்காக் கூட்டமைப்பிட்டைச் சொல்ல வேணும்.

- கோளரங்கன்

---

### இசைக்கச்...

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ரைற்றன் மணிக்கூட்டு இசையை சிறிய பகுதியாக தமிழ்த்திரையிசையின் இசையமைப்பாளர் ஒருவரே போட்டதாக இதுவரை நம்பியிருந்தேன். என்னைப்போல் தான் பலரும் இது மொஸார்ட் இசைத்தது என்று தெரியாமல் இருக்கிறார்கள். மொஸார்டின் இசையையும் ரைற்றன் இசையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் விதமாக கட்டுரையை எழுதியிருப்பது ரசனைக்குரியது.

ஹாரிஸ் ஜெயராஜ், ரமேஷ் விநாயகம், இமான், சந்தோஷ் நாராயணன், அனிருத் பற்றிய குறிப்புகள் இக்கால இசைத் தலைமுறையின் போக்குகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதாக உள்ளது. குறிப்பாக ஜிப்ரான் பற்றிய கட்டுரையில் அவருக்கான வாய்ப்பு சரியாகக் கூடிவரவில்லை என்ற கருத்தோடு முற்றுமுழுதாக உடன்பட முடிகின்றது. அண்மைக்காலத்தில் கமல்ஹாசன் தனது சில படங்களுக்குத் தொடர்ச்சியான வாய்ப்புக்களை அவருக்குக் கொடுத்தாலும் ஹிந்துஸ்தான் இசையிலும் பாண்டித்தியம் பெற்ற அவருக்கு வாய்ப்புகள் கிடையாமல் போவது தமிழ்த்திரையிசையின் துர்திஸ்டம் எனலாம்.

அதேபோல் யுவன் சங்கர் ராஜா - செல்வராகவன் கூட்டணியைப் பற்றிய கட்டுரையே உள்ளது. 'காதல் கொண்டேன்' திரைப்பாடல்களுக்கு என்றுமே ரசிகர்களிடம் தனியிடம் இருப்பதை உணரக்கூடியதாக இருந்தாலும் யுவன் குறித்து தனிக் கட்டுரை இல்லாதது ஏமாற்றமாக இருந்தது. இளையராஜாவுடன் கமலின் இரு பாடல்கள் பற்றியதான ஒரு கட்டுரையும் நூலில் உள்ளது. ஒருபாடல் 'விருமாண்டி' கிளைமாக்ஸ் பாடல். மற்றைய பாடல் 'ஹேராம்' திரைப்படத்தில் அஜய் சக்கரவர்த்தி பாடிய 'இசையில் தொடங்குதம்மா'. இரண்டு பாடல்களும் ராஜாவின் புலமைத் துவத்தின் வகைமாதிரிகளாக விளங்குகின்றன.

ஆனாலும் ராஜேஷ் இசைஞானி குறித்து ஒரு கட்டுரையையே இந்த நூலில் எழுதினாலும் அதற்குப் பிராயச்சித்தமாக அவர் குறித்து தனிப்புத்தகம் ஒன்றை எழுத வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்கான தகுதி அவரிடம் இருப்பதை நூல் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. ஒரு ரசிகரின் பார்வையில் அற்புத உழைப்பின் தொகுப்பாய் வெளிவந்துள்ள இந்தநூல் ஒவ்வொரு இசை ரசிகராலும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றாகும்.

### கிம் கி டுக்....

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி)*

Address Unknown(2001) என்பன கிம்மின் முக்கிய திரைப்படங்கள். நான் முதலில் பார்த்த கிம்மின் திரைப்படம் The Isle. பனி விலகும் காலைப் பொழுதில் நீரில் அங்குமிங்கும் மிதக்கும் தனித்தனி சிறிய வீடுகள். அந்த வீடுகளுக்குத் தங்க வரும் பயணிகள், அந்தப் பயணிகளுக்கு வேண்டியதை கரையில் இருந்து எடுத்துச் செல்லும் பெண். அவள் சிலநேரம் விலையும் போகிறாள். இந்தக் கதையின் கதாநாயகி அவள் தான். அவளுக்கு அங்கு வாழ்க்கை வெறுத்து வந்து தங்கிக் கொள்ளும் கதாநாயகன் மீது மெல்ல மெல்லக் காதல் வந்து விடுகிறது. அதை அவன் விளங்கிக் கொள்வதும் சரிவராது என்று விலகிப் போவதுமாக இருக்கிறான். பிறகு அவளதும் அவனதும் முடிவுகள் அவர்களது வாழ்கையை எப்படி மாற்றிக் கொண்டு போகிறது என்பது படத்தின் மீதிக்கதை.

கதையில் வரும் மனிதர்களும் அவர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வெறுப்பும், வக்கிரமும், வன்முறையும், மோகமும், காதலும் எல்லாமும் பதட்டத்துடன் உறையவைத்துக் கதை சொல்லப்படுகின்றது. படத்தின் முடிவை குறியீட்டுத் தனமாக காட்சியாக்கியிருக்கிறார் கிம். அதை எப்படியும் யாரும் புரிந்து கொள்ளலாம். ஆனால் படம் நிச்சயம் எவரையும் அசைபோட்டுப் பார்க்கவைக்கும் அலைக்கழிக்கும். கிம்மின் வெற்றியும் அதுவாகவே இருக்கிறது.



# சந்திக்கு வந்த சாத்தான் அரசியல்

**- நோக்கன்**

இலங்கையில் நடைபெற்ற குண்டு வெடிப்பானது மொத்தத்தில் இலங்கையின் அரசியல் தளத்தையே ஆட்டங்காணச் செய்திருக்கிறதெனலாம். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதைப்போல குண்டு வெடிப் பைச் சில தேவைகளுக்காக அரசியல்வாதிகள் திட்டமிட்டு நடத்தியிருந்தார்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் அந்த நடவடிக்கையானது அவர்களுக்கு எதிராகவும் கிளம்பியிருக்கிறதாகக் கருதப்படுகிறது.

நாடாளுமன்ற விசாரணைக் குழுவுக்கு முன்னால் பல முக்கிய புள்ளிகள் சாட்சியமளித்திருக்கிறார்கள். மேலும் பலர் சாட்சியமளிக்க அழைக்கப் பட்டிருக்கிறார்கள். விசாரணை முடுக்கிவிட்ட பின்னரே பல விடயங்கள் வெளிவந்திருக்கின்றன. குண்டு வெடிப்பானது திட்டமிடப்பட்டதொன்று என்றதனை வலுப்படுத்தும் விதமாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளதை நிரூபிக்கின்றவகையில் சாட்சியங்களின் வாக்கு மூலங்கள் அமைந்திருக்கின்றன. தம்மைக் காப்பாற்ற வேண்டியதாகச் சூழ்நிலை வந்துவிட்டபோது பலர் அரசியல் வாந்தி எடுத்திருக்கிறார்கள்.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசினை ஆட்டம் காண வைக்க ஏற்படுத்தப்பட்ட சதி முயற்சி என எடுத்துக் கொண்டாலும் குண்டு வெடிப்பானது அந்த இலக்கை நிறைவேற்றுவதற்குப் பதிலாகப் பல புதிய சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறதாகவே கருத வேண்டி இருக்கிறது. குறிப்பாக முஸ்லிம் அரசியல் தலைமைகள், அதிலும் முக்கியமாகக் கிழக்கிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்குத் தெரியாமல் இது நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்ற கருத்தும் வலுப்பெற்றிருப்பதானது அவர்களது எதிர்கால அரசியல் தளத்தினைப் பல் வேறு சூழ்நிலைக்குள் இட்டுச் சென்றிருக்கிறது. அது மட்டுமல்லாது சாதாரண முஸ்லிம்கள் வாழ்க்கையில் பல நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கின்றன. முஸ்லிம் பெண்கள் தொடர்பான பணிகளிலும், ஆடை அணிகலன்களிலும், நடைமுறைகளிலும் பல முக்கியமான மாற்றங்களைச் செய்ய வேண்டியவர்களாக அவர்கள் இருக்கின்றனர். வேண்டாத வகையில் தமது அடையாளங்களை இழப்பது அல்லது மாற்றத்தை மேற்கொள்வதென்பதை மிகவும் மோசமானதாக அவர்கள் உணருகின்றனர். தமது விருப்பத்திற் கேற்றவாறோ அல்லது தமது கலாசாரத்துக் கேற்றவாறோ தமது நடைமுறைகளை அமைத்துக்கொள்ளச் சுதந்திர மற்றவர்களாக அவர்கள் மாற்றம் பெற்றிருப்பது அரசியலிலும் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துக்கிறதெனலாம்.

ஆரம்பத்தில் சிங்களவர்களோடு சேர்ந்து சிங்களவர்களாகவும் தமிழர்களோடு சேர்ந்து தமிழர்களாகவும் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டு இருபக்கங்களிலும் கண்ட சௌகரியத்தை அனுபவித்துக் கொண்டு. இலங்கையில் காணப்படும் ஏனைய இனத்தவர்களைக் காட்டிலும் அரச சார்பாகக் காணும் அனுகூலங்கள் பலவற்றைச் சுகித்துக் கொண்டும் இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு நடைபெற்ற குண்டு வெடிப்புப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அரச மற்றும் தனியார் துறைகளிலெல்லாம் தமது கைவரிசைகளைக் காட்டிப் பலன் பெற்றுக் கொண்டு இருந்தவர்களுக்குப் பேரிடியாகக் குண்டு வெடிப்பு அமைந்ததாகவும் சிலர் குறிப்பிட்டு எழுதிய கட்டுரையைப் படித்தோம்.

ஆனால் இத்தகைய சூழ்நிலைகளை சமா ளிப்பதென்பது அவர்களுக்குக் கைவந்தகலை என்றும் விலாங்கு மீனைப்போன்று அவர் களுக்கு வாழத்தெரியும் அதனால் அவர்கள் தற்பொழுது தோன்றிய சூழ்நிலையை வென்று விடுவார்கள் என்றும் மக்கள் கருதுகின்றனர்.

இருந்தும் பௌத்த மதத்தவர்களைக் குறிப் பாகப் பிக்குமார்களைத் தாம் அனுசரித்துப் போக வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் கள் இருக்கின்ற நிலையே தற்பொழுது காணப்படுகிறது.

ஒரு பொழுதும் பொசன் பண்டிகையின்போது களமிறங்காதவர்கள் இம்முறை களமிறங்கி பௌத்த கொடிகளைக் கட்டி இருக்கிறார்கள். இன்னொரு காரியாலயத்தைத் தரமுயர்த்தக் கூடாது என்று வரிந்து கட்டிக் கொண்டு உண்ணாவிரதமிருந்த ஒரு முறையற்ற அரசியல் பின்னணிகளைக் கொண்ட முஸ்லிம்களின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்களும் பிக்குமார்களே. எனவே பிக்குமார்களின் தயவை நாட வேண்டிய நிலைமைக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். அதாவது பிக்குமார்களிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற முனைப்போடு இவர்கள் காய்களை நகர்த்துவதாகவும், இவர்களைப் பகடைக்காய்களாக வைத்து தமிழ் முஸ்லிம் உறவுக்கு ஆப்பு வைக்க வேண்டும் என்று பிக்குகள் இருப்பதாகவும் சொல்லப்படுகிற விடயத்தில் எது சரி? எது பிழை? என்பது தெரியாமல் திண்டாடுவது பொது மக்களே.

முன்பு முஸ்லிம் இனத்தவர்களை வைத்துத் தமிழ் போராட்டத்தை நசுக்கியபோல தற்பொழுது தமிழர்களை வைத்து முஸ்லிம்களை நசுக்கலாம் என்பது பேரினவாதத்தின் உச்சக் கட்ட நடவடிக்கையாக இருக்கிறது. இதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து புனர்வாழ்வு பெற்ற போரளிகளை அழைத்து இராணுவம் பேசி இருப்பதை ஆதாரமாகக் காட்டலாம்.

தடிகொடுத்து அடிவாங்கியவனின் கதையாக முஸ்லிம்களின் தற்போதைய நிலை. சும்மா இருந்த குட்டையைக் குழப்பப் போய் - அதாவது உலக அரசியலில் பகடைக்காயாக ஆக்கப்பட்டவர் ஐ.எஸ் சஹ்ரான் குழுவினர்- நாறியது அவர்கள் சார்ந்த மக்களும், சமயமுமே! ஆனால் சஹ்ரானும் பேரினவாதிகளின் அரசியல் இராஜதந்திரத்துக்குள் அகப்பட்டுக் கொண்டவர் என்பது தற்போது விசாரணைகளில் அறியக்கூடியதா இருக்கிறது. அரசிலும், அரசியலிலும் தம்மைப் பலமாகக் காட்டிக் கொண்டவர்களின் தந்திரத்துக்குப் பலியாகிப்போனவர் சஹ்ரான். அவருக்குக் குண்டை வைக்கத் தைரியம் கொடுத்து அதனால் வரும் எதிர்வினைகளையும் தாம் சமாளிப்பதாகவும் அந்த அரசியல் சாக்கடைகள் உறுதி கொடுத் திருப்பார்களோ? தெரியவில்லை!

வவுணதீவுக் கொலைகளைப் பற்றி அரசு முன்னர் அறிந்திருந்தும் சஹ்ரா னுக்குத் தைரியம் கொடுப்பதற்காக அதை முன்னாள் புலிப்போராளிகளின் தலையில் சுமத்தியிருக்கலாம். அதே போல பழியையும் புலி உறுப்பினர்களைப் போன்றவர்களது தலையில் சுமத்தி தமது மக்களையும் அவர்கள் காப்பாற்றுவார்கள் என நம்பியே சஹ்ரானும் குண்டை வெடிக்க வைத்திருக்கலாம்.

ஆனால் குண்டுகள் வெடிக்கத் தேர்ந்தெடுத்த இடங்கள், அதற்கான வலை அமைப்பு, அதில் பங்குபற்றியவர்களுக்குக் கொடுத்த பலயீனமான பயிற்சி, தொழில் நுட்பப் பற்றாக் குறையுடன் தயாரிக்கப்பட்ட குண்டுகள், மக்கள் மயப்படுத்தப்படாத அவர்கள் நடவடிக்கைகள், பணத்தை மட்டும் பலமாகக் கொண்ட அவர்கள் தயாரிப்புகள் என்று எல்லாவற்றாலும் அவர்கள் சிறு பிள்ளைத் தனமானவர்கள் என்று அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்

ஆனால் பாழாய்ப்போன தொழில் நுட்பத்தினால் சீசீரீவி க்களின் உதவியோடு சகல பயங்கரவாதிகளையும், அவர்தம் நடவடிக்கைகளையும் சில நிமிட நேரங்களில் இனங்கண்டதால் பலர் தப்பினார்கள். இல்லாவிடில் அதையும் முன்னாள் புலிப்போராளிகளின் தலையில் சுமத்தி அழகுபார்த்திருப்பார்கள் புலனாய்வார்கள். அதற்காகத்தானோ பல காலமாக புலி வரும்... புலி வரும் எப் பூச்சாண்டி காட்டிக் கொண்டு வந்தனரோ தெரியாது?

எப்படியோ குண்டு வெடிப்பால் பல இரகசியங்கள் அதுவும் உள்வீட்டு இரகசியங்கள் வெளிவந்துவிட்டன. பலர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். அரசுக்கு பல கோடி நஷடத்தை ஏற்படுத்தினாலும் பல கோடி ஊழல்களும் பண மோசடிகளும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. சாத்தான் ஓதியது வேதம் அரசியல் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. எல்லாப் புகழும் இறைவனுக்கே. அஸ்லாஹு அக்பர்.

# கிரிக்கெட்



நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணப் போட்டியில் நியூசிலாந்து ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான மார்ட்டின் குப்தில் மற்றும் கொலின் முன்ரோ ஆகிய இருவரும் தாங்கள் சந்தித்த செல்டன் கோற்றலின் முதற்பந்திலேயே ஆட்டமிழந்தார்கள்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் இவ்வாறு முதற்பந்திலேயே ஆட்டமிழப்பது இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னதாக 2015 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இலங்கை வீரர்களான டில்சானும் திரிமன்னேயும் தாம் சந்தித்த முதற் பந்திலேயே ஆட்டமிழந்தார்கள். ஆனாலும் இவர்கள் இருவரும் இரண்டு ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்களிடம் ஆட்டமிழந்திருந்தார்கள்.

அந்த வகையில் டில்சான், சபூர் சட்ரனின் பந்துவீச்சிலும் திரிமன்னே தவ்லற் சட்ரனின் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்திருந்தார்கள். ஆனால் நியூசிலாந்துடனான போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் செல்டன் கோற்றலே வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

• • •

உலகக் கிண்ணப் போட்டிகள் முடிந்த பிற்பாடு இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகள், 3 இருபதுக்கு 20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடரின் ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விராட் கோலி மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை இவ்விருவரும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஏதுவாக அதற்கு முன்னதாக இந்திய அணியோடு இணைந்து கொள்வார்களென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஆரம்பப் போட்டியாக இந்த டெஸ்ட் தொடர் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



BIRMINGHAM 2022

# தடகளம்

பேர்மிங்ஹாமில் உள்ள அலெக்சாண்டர் மைதானம் 2022 ஆம் ஆண்டு அங்கு நடைபெறவுள்ள பொது நலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காக எவ்வாறு மாற்றப்படவுள்ளது குறித்த வடிவமைப்புகளின் மாதிரி கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தற்போது காணப்படும் 12,700 நிரந்தர இருக்கைகளின் எண்ணிக்கை 18,000 ஆக அதிகரிக்கப்படவுள்ளதோடு போட்டிகளுக்காக 40,000 தற்காலிக இருக்கைகளும் அமைக்கப்படவுள்ளன. சர்வதேச மெய்வல்லுனர் சங்கங்களின் சம்மேளனத்தின் அளவுப் பிரமாணங்களுக்கமைவாக 400 மீற்றர் ஓடுபாதை மீளவும் மாற்றியமைக்கப் படவுள்ளது. பிரிட்டனில் பொதுநலவாயப் போட்டிகள் இந்த நூற்றாண்டில் நடைபெறுவது இது 3ஆவது தடவையாகும்.

முன்னதாக 2002 ஆம் ஆண்டு மன்செஸ்ரரிலும் 2014 ஆம் ஆண்டு கிளாஸ்கோவிலும் நடைபெற்றிருந்தன. 2022 ஆம் ஆண்டு பொதுநலவாயப் போட்டிகள் ஜூலை 27 - ஓகஸ்ட் 7 வரை நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் அதேவேளை பொது ஆலோசனைப் பின்னூட்டத்துக்கான காலக்கெடு எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ரென்னிஸ்



சுவிற்சர்லாந்தின் றோஜர் பெடரர் கடந்தவாரம் ஜேர்மனியில் நடைபெற்று முடிந்த ஹாலே ஓப்பன் தொடரின் இறுதிப் போட்டியில் பெல்ஜிய வீரரான டேவிட் கொபினை 7 : 6, 6 : 1 என்ற செற் கணக்கில் தோற்கடித்து 10 ஆவது தடவையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார். எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் போட்டிகள் லண்டனில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த வெற்றி பெடரருக்கு ஊக்கமளிக்கும் என்று நம்பலாம்.

ஏனென்றால் இதுவரை விம்பிள்டன் தொடரில் 8 தடவைகள் பெடரர் கிண்ணம் வென்றாலும் 2018 ஆம் ஆண்டு ஜோகோவிச்சே சம்பியன் பட்டம் வென்றிருந்தார். அத்தோடு 2018 அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடரில் பெடரர் 20 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றதற்குப் பிற்பாடு எந்தவொரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் அவர் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

லண்டனில் நடைபெற்று முடிந்த குயின்ஸ்கிளப் சம்பியன்ஸ்ஷிப் தொடரின் இரட்டையர் போட்டியில் இங்கிலாந்தின் அண்டி முரே - ஸபெயினின் பெலிசியானோ லோபஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இடுப்பில் மேற்கொண்ட சத்திரசிகிச்சையின் பின்னர் அண்டி முரே வென்ற முதற்கிண்ணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் பெலிசியானோ லோபஸ், பிரான்சின் ஜைல்ஸ் சிமொனை வீழ்த்தி கிண்ணம் வென்றார்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் வைல்காட் மூலம் தெரிவான வீரர் ஒருவர் 20 வருடங்களுக்குப் பிறகு கிண்ணம் வென்றது இது தான் முதற்தடவை. முன்னதாக அமெரிக்காவின் பீற் சாம்பிரஸ் இத்தொடரில் அவ்வாறு கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டம்

ஸ்பெயின் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான பெர்னாண்டோ ரொறஸ் உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்தவாரம் அறிவித்துள்ளார். 2003 ஆம் ஆண்டு ஸ்பெயின் அணிக்காக விளையாட ஆரம்பித்த ரொறஸ் 2008 யூரோ கிண்ணத் தொடரில் ஜேர்மனிக்கெதிரான இறுதிப்போட்டியில் வெற்றிக் கோலை அடித்து கிண்ணம் வெல்லக் காரணமாக இருந்தவர். அதுபோல் 2012 யூரோ தொடரிலும் அதிக கோல்கள் அடித்து அவர் படைத்த சாதனை ஸ்பெயின் கிண்ணத்தை தக்கவைப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.



அத்தோடு 2010 உலகக் கிண்ணத்தை ஸ்பெயின் முதன் முறையாகக் கைப்பற்றுவதற்கும் அவரது வகிபங்கு முக்கியமானதாக இருந்தது. ஸ்பெயின் அணிக்காக 110 போட்டிகளில் விளையாடியுள்ள ரொறஸ் 38 கோல்களை அடித்து அதிககோல்கள் அடித்தவர் வரிசையில் மூன்றாமிடத்தில் உள்ளதோடு அத்லெரிகோ மட்ரிட், லிவர்பூல், செல்சி, ஏ.சி. மிலான் போன்ற பல்வேறு கழகங்களுக்காக விளையாடி நூற்றுக்கும் மேற் பட்ட கோல்களை அடித்தமையும் குறிப்பிடத் தக்கது.

• • •




ஒவ்வொரு வருடமும் லாலிகா தொடரின் புதிய பருவகாலம் ஆரம்பிக்கும் முன்னதாகவும் முடிந்து செல்லும் பருவகாலத்தின் இறுதிப் போட்டியாகவும் 'ஜோன் காம்பர் கிண்ண' நட்புறவுப் போட்டியை பார்சிலோனா அணி நிர்வாகம் நடத்தி வருவது மரபாக உள்ளது. பார்சிலோனா அணியின் முன்னாள் வீரராகவும் கழகத்தின் தலைவராகவும் இருந்த ஜோன் காம்பரின் நினைவாக 1966 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இத்தொடரில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரு அணியோடு பார்சிலோனா அணி ஒருபோட்டியில் விளையாடி வருகின்றது. அந்தவகையில் எதிர்வரும் ஓகஸ்ற் 4 ஆம் திகதி பார்சிலோனா மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த வருடப் போட்டியில் பார்சிலோனா அணி, ஆர்சனல் அணியோடு விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்தவருடம் நடைபெற்ற பார்சிலோனா மற்றும் ஆர்ஜென்ரீனாவின் போக்கா ஜூனியர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் பார்சிலோனா 3 : 0 என்று வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 29.06.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.